பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paperin SriLanka.

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(கி-2014)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 வைகாசி 16 புதன்கிழமை 30-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 162

## ★ சமாதானப் பேச்சுக்கு வருமாறு
# புலிகளுக்கு மீண்டும் ஜனாதிபதி அழைப்பு
## தடைநீக்கம் பற்றி கருத்துக்கூற மறுப்பு



(நமது நிருபர்)

★ தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை அரசாங்கம் இன்னமும் கைவிடவில்லை.

★ அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளில் எதுவித மாற்றமும் இல்லை.

★ சமாதானப் பேச்சுவார்த்தையில் அரசுக்கு இன்னமும் நம்பிக்கை உண்டு.

★ யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து சிறுபான்மையினரது பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசாங்கம் தயாராகவுள்ளது. இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினிக்கு நேற்றிரவு 7மணிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்:

இப்பேட்டியின்போதுபேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகள் வரவேண்டுமென்று ஜனாதிபதி புலிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் விடுதலைப்புலிகளைபேச்சுவார்த்தைமேசைக்குக் கொண்டுவருவதற்கு, தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இனப்பிரச்சினை தொடர்பான சமாதான விடயத்தில் எனதுஅரசாங்கத்தினது உறுதி இன்னமும் மாறவில்லை. மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்துசமாதானத்தை நிலைநாட்டவே அரசாங்கம் பாடுபடுகிறது.

கொடியயுத்தத்தைநிறுத்தி பேச்சுவார்த்தைக்கு வருமாறு நான் விடுதலைப் புலிகளைக் கோருகிறேன்; சமா

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

[வவுனியா]

நேற்று முன்தினம்மணலாற்றுப் பகுதியில் படையினருடனான எதிர்பாராத மோதலின் போது

★ லெப்ரினன் பிரபாகினி [வீரசிங்கம் வசந்தா]மட்டக்களப்பு

(8ம் பக்கம் பார்க்க]

## புளொட் உறுப்பினர் சுட்டுக்கொலை

[மன்னார்]

மன்னாரில்புளொட்அமைப்

## யாழ். கோட்டைப் பகுதியில்

## தூதுவர் எரிக்சோல் கொழும்புவருவதுதாமதம

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில்சமாதானமுயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வரும் நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் தற்போதைய சூழ் நிலையில் கொழுப்பு வரும் சாத்தியக் கூறுகள் இல்லையென நோர்வே தூதரக வட்டாரங்கள் நேற்றுத தெரிவித்தன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தடை நீக்கம் தொடர்பாக அரசின் நிலைப்பாடும், விடுதலைப் புலிகளின் எச்சரிக்கையுடன் கூடிய அறிக்கையும் வெளியாகியுள்ள இச்சந்தர்ப்பத்தில் நோர்வேத்தூதுவரின் கொழும்பு விஜயம தற்போதைக்கு சாத்தியப்படமாட்டாது என்றும், தூதரக வட்டாரங்கள் மேலும தெரிவித்துள்ளன.

சமாதானப் பேச்சு வார்த்தைக்கு உகந்த சூழ் நிலையொன்றுஉருவ குமசாத்தியக் கூறுகள் தென்பட்ட லேஒழிய எரிக்சோல் ஹெய்ம உடனடியாக வரக்கூடிய சாத்தியக் கூறுகள் இல்லைஎனவும தெரிவிக்கப்படுகிறது (வ)

## அரசு-புலிகள் பேசுவதை எதிர்நது
# சிஹல உறுமய 10 லட்சம் கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

அரசாங்கம், தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளைநடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பத்துலட்சம் பேர்களின் கையொப்பங்களைப்பெறும்இயக்கத்தை சிஹலஉறுமயக் கட்சி நேற்று ஆரம்பித்துள்ளது:

கண்டியில் தலதாமாளிகையில் இடம்பெற்ற விசேட பூசைகளுடன் இந்தக் கையொபபங்கள் பெறும் பணி ஆரம்பிக்கப்பட்டுளது

தலதாமளிகையில் இடம் பெற்ற விசேட பூசைவழிபாடுகளின்பின் சிஹலஉறுமயவின் தலைவர்கள திஸவதனே நிலமே நிரஞ்சன்விஜேந்திரா

(8-ம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சியில் தடங்கல்
# பத்து தமிழ்க் கட்சிகள் விரைவில் கூடி ஆராயும்

[கொழும்பு]

இனப்பிரச்சினைக்கான சமாதானத் தீர்வில் ஏற்பட்டுள்ள தடங்கல்களை அடுத்து பத்துத் தமிழ்க் கட்சிகளும் வெகு விரைவில் கொழும்பில் கூடிஆராயவுள்ளன.

பத்துத்தமிழ்க் கட்சிகளை கொண்ட கூட்டமைப்பு விடுதலைப்புலிகள் மீதானதடையை அகற்றக் கோரி பல்வேறு வழிகளிலும்அழுத்தங்களைக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்வாரம் நடைபெறவுள்ள கூட்டத்தில் நோர்வேயின் சமாதான முயற்சியை சிறிலங்கா அரசும் விடுதலைப்புலிகளும்தொடரவேண்டுமெனக் கோரும் பிரகடனம் ஒன்று வெளியிடப் படவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது [ப]

## வெடிவிபத்தில் ஒருவர் மரணம

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில்

### யாழ். கோட்டைப் பகுதியில்

# அழுகிய நிலையில் ஆணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதியில் அழுகிய நிலையில் காணப்பட்ட இளைஞனின் சடலமொன்று நேற்று யாழ். பொலிசாரால் மீட்கப்பட்டு, யாழ்: போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது:

அடையாளம் காண்பதற்காக போதனா வைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ள இச் சடலத்தை அடையாளம் காண உதவுமாறுகேட்கப்பட்டுள்ளது; (இ-43.6)

## சுட்டுக் கொலை

[மன்னார்]

மன்னாரில்புளொட்அமைப்பின் உறுப்பினர் ஒருவர் நேற்று இரவு 7 30 மணியளவில் இனந் தெரியாதோரால் சுட்டுக்கொல்லப் பட்டார்.

கோப்பாயைச் சேர்ந்த அருந்தவராசா தமிழ்வாசன் [வயது35] என்பவரே சுட்டுக் கொல்லப் பட்டவராவார்.

புளொட் அலுவலகத்திலிருந்து மன்னார் பெரியகடை வீதியிலுள்ள தனது வீட்டிற்குச் சென்ற சமயமே இச்சம்பவம் இடம்பெற்றது. [ந]

யை அகற்றக் கோரி பல்வேறு வழிகளிலும்அழுத்தங்களைக் கொடுக்கத் திட்டமிட்டுள்ளது.

இவ்விடயம் சம்பந்தமாக

# இலங்கை நிராகரித்தது

[கொழும்பு]

கச்சதீவை திருப்பி ஒப்படைக்கவேண்டுமென்ற தமிழக ஆளுனர் பாத்திமா பீபியின் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

## ஒருவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வேலணைப் பகுதியில் ஈ.பி.டி.பி உறுப்பினரொருவர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்

தற்செயலான வெடிவிபத்திலேயே மேற்படி உயிரிழப்பு ஏற்பட்டதாக ஈபிடிபி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இச்சம்பவத்தில் ஜெராட் அன்ரன் [வயது 24] என்பவரே உயிரிழந்தவராவர்.

இவரது மரணம் தொடர்

[8 ஆம் பக்கம் பார்க்க]

# கண்டிறோயல்பூங்காவில் 35 காதல் ஜோடிகள் கைது

## பாடசாலை மாணவர்களாம்

[கொழும்பு]

கண்டி மாநகரசபைப் பகுதியில் அமைந்துள்ள றோயல் பூங்காவில் உல்லா சமாகப் பொழுதைக்கழித்துக்கொண்டிருந்த பாடசலைகளில் கல்விபயிலும் 35 இளம் காதல் ஜோடிகளை கண்டிப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

14 முதல் 18 வயது நிரம்பிய காதல் ஜோடிகள் பாடசாலை வகுப்புக்களுக்குச் செல்வதாகப்பாசாங்கு காட்டி விட்டு பூங்காவில் உல்லா சமாக பொழுதைக்கழித்துக் கொண்டிருந்த சமயமே கண்டிப்பொலிசாரிடம் வகையாக மாட்டிக் கொண்டுள்

(8ம் பக்கம் பார்க்க)

### திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தைக் கண்டித்து

# யாழ். நகரவர்த்தக நிலையங்கள் இன்று11 மணிவரை கடையடைப்பு!

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்: வடவலய உதவிப் பொது முகாமையாளர் திருநாவுக்கரசின் இடமாற்றத்திற்குஎதிர்ப்புத் தெரிவித்து இன்று முற்பகல் 11.00 மணிவரை யாழ் நகர வர்த்தகநிலையங்கள் மூடப்பட்டிருக்குமென யாழ். வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். வணிகர்கழகம் விடுத்த துண்டுப்பிரசுரத்தில், உதவிப் பொது முகாமையாளர் திருநாவுக்கரசுவின் இடமாற்றத்தை நிறுத்துமாறு நாம் பலதரப்பினரிடம் கேட்டிருந்தும் பலனெதுவும் அளிக்காத நிலையில் மட்டுப்படுத்கப் பட்ட கடையடைப்பை மேற்கொள்வதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை வர்த்தகர்கள் இன்று ஊர்வலமாகச்சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் மகஜர் கையளிப்பர்களெனவும் தெரிய வருகிறது. (ந)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## மின்தாக்கி காயம்

[யாழ்ப்பாணம்]

வானொலிக்கு மின் இணைப்புக் கொடுக்க முற்பட்ட வேளை மின்சாரம் தாக்கியதால் ஒருவர் காயமடைந்துள்ளார்.

கொட்டடியைச் சேர்ந்த சொக்கலிங்கம் விமலதாஸ் [வயது-50] என்பவரே இவ்வாறு காயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [உ-2]

## பதிவுகள் ஆரம்பம்

[மந்திகை]

சாவகச்சேரிப் பிரதேசத்தில் பொது மக்கள் மீளக் குடியமர்வது தொடர்பான பதிவு நடவடிக்கைகள் திங்கள் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கான சிவில் நிர்வாகக் காரியாலயம் தனங்கிளப்பு வீதியில் அமைக்கப்பட்டுள்ளது. (உ-23)

# விடுதலை செய்யப்பட்ட கணவன் வீடுவந்துசேரவில்லைமனைவிபுகார்

[யாழ்ப்பாணம்]

விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட தனது கணவன் வீடு வந்து சேரவில்லை என குடும்பப் பெண் ஒருவர் யாழ். மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

கந்தையா வாத்தியார் வீதியைச் சேர்ந்த தனது கணவனாகிய எஸ். ரவீந்திரன் கடந்த மாதம் 19 ஆம் திகதி கொழும்பில் ஈஸ்வரன் விடுதியில் தங்கியிருந்த வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகவும்,

பின்னர் இம்மாதம் 13 ஆம் திகதி கைது செய்யப்பட்டு தான் மாத்தறை சிறையில் உள்ளதாகவும்,

கிராம அலுவலரின் உறுதிப்படுத்தற் கடிதம் ஒன்றினை தனது சகோதரன் மூலம் அனுப்பி வைக்குமாறும் கணவர் கைப்பட தந்தி ஒன்று அனுப்பப் பட்டதற்கிணங்க கிராம அலுவலரின் உறுதிப்படுத்தும் கடிதத்தை அனுப்பியதோடு,

கணவரினால் அனுப்பப்பட்ட தந்தியோடு மாத்தறை சிறைச்சாலைக்குச் சென்ற போது மறுநாள் விடுவிப்பதாக கூறியதை நம்பி கணவனின் சகோதரன் சென்ற போது அவரை விடுதலை செய்து விட்டதாக சிறைச்சாலை அதிகாரிகள் கூறிய போதும் கணவன் இன்று வரை வீடுவந்து சேரவில்லை எனவும் கைதானவரின் மனைவியும் 2 பிள்ளைகளின் தாயுமான ரவீந்திரன் ஜெபக்குமாரி தனது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். [உ-10]

## இன்று

[யாழ்ப்பாணம்]

யாழ்.பல்கலைக்கழக இளம் பொருளியலாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் இடம் பெற்று வரும் கருத்தரங்கு தொடரில் இன்றைய தினம் யாழ். பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத்தில் பி.ப 3.00 மணிக்கு 'வங்கிச் சட்டங்களும் நடைமுறைகளும்' எனும் பொருளில் மக்கள் வங்கி முகாமையாளர் ரி. ரகு கருத்துரை வழங்குவார். (உ-6)

## சுகாதாரக் கண்காட்சி

[யாழ்ப்பாணம்]

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் நடத்தப்படும் சுகாதாரக் கண்காட்சி எதிர் வரும் 1, 2 ஆம் திகதிகளில் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

தொற்று நோய்த் தடுப்பு, பாலியல் நோய்த்தடுப்பு மலேரியாத் தடுப்பு, பொதுச் சுகாதாரம் போன்றவற்றில் நவீன முறையில் விளக்கமளிக்கப்படும் இக் கண்காட்சியை அனைவரும் இலவசமாகப் பார்வையிட்டு பயன் பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ- 04]

## வெடிப்பொருள் மீட்பு

[கொழும்பு]

பொதுமகன் ஒருவர் கொடுத்த தகவலையடுத்து முகமாலைப் பகுதியில் கடந்த 27 ஆம் திகதியன்று தேடுதல் நடத்திய படையினர் அப்பகுதியில் இருந்து 20 கிலோ வெடிப் பொருளினைக் கைப்பற்றியுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது (உ-9)

## சு.மொ.வி. நிலையங்களின் செயற்பாடுகளை விஸ்தரிக்குமாறு பணிப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் செயற்பாடுகளை விஸ்தரிக்குமாறு, உணவு சந்தைப்படுத்தல் அபிவிருத்தி அமைச்சர் றெஜிரணதுங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

யாழ் குடாநாட்டில் நான்கு கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் இயங்கி வந்த போதிலும் கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் மூன்று கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுவிட்டமை குறிப்பிடத்தக்கது. (செ)

## காணாமறபோனோர் பற்றிய விசாரணைகளுக்கு சமுகமளிக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து 1996, 1997 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வரும் விசேட புலனாய்வுப் பிரிவினர் கீழ் வரும் காணாமற் போனோர் தொடர்பாக அவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சியங்களை விசாரணைகளுக்காக யாழ் பொலிஸ் நிலையத்துடன் தொடர்புகொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ சுப்பிரமணியம்சுதாகரன் (பி-18) கொக்குவில்.
முறைப்பாடு:- கமலாதேவி சுப்பிரமணியம் கனகாம்பிகை (நல்லூர்) ராஜா (அரியாலை)

★ செல்வராசா பார்த்தீபன் (ஏ-10) நாவலர் வீதி அரியாலை. முறைப்பாடு:- செல்வராசா பிரதீபன்
சாட்சிகள் :- கமலாவதி, வாகீசன்.
சகிலா மகாலிங்கம் சுரேஸ் பவாணி சண்முகநாதன்.

★ நந்தவனம் சிவராசா உடுப்பிட்டி
முறைப்பாடு:-சிவராசா இராசநாயகி
சாட்சி: -சரஸ்வதி

★ சின்னத்தம்பி கோபால கிருஷ்ணன் (பி-77) கைதடி நாவற்குழி
முறைப்பாடு:-சங்கரன் சித்தன்
சாட்சி;-செல்வராணி

★ சதிரவேலு ஜெயந்தினி (ஏ-21) அரசடி நவாலி
முறைப்பாடு: கதிரவேலு நகுலேஸ்வரி.

★ பெர்ணாந்து ஜெபகண்ணன் (பி-130) 218, குருசோ வீதி யாழ்ப்பாணம்.
முறைப்பாடு:- ஆசீர்வாதம் பெர்ணாந்து, (மருமகன்)
சாட்சி:-ஜெயக்கண்ணன் சுபாஜினி (மனைவி)

★ பொன்னையா ஜெயராசா (பி-43) நாவற்குழி கைதடி
முறைப்பாடு:-சுப்பிரமணியம் பொன்னையா;

★ நடராசா ஜீவரட்ணம் (பி-41) வேம்பொடுகேணி பளை.
முறைப்பாடு:-நடராசா விஜயரட்ணம்.

★ யோண்பிள்ளை அன்ரன் அமரநாதன் (ஏ-21(?)) கேரதீவு நாவற்குழி
முறைப்பாடு:-மேரி அன்கலிஸ்ரா
சாட்சி:-கோபால சிங்கம் ஜீவபாலன்.

★ வல்லிபுரம் பாஸ்கரன் (பி-85)
மறவன்புலோ கிழக்கு சாவகச்சேரி. (உறவினர்கள் சாட்சிகளுக்கு அழைப்பு)

★ சின்னத்தம்பி ஞானேந்திரன் (பி-83)
எழுதுமட்டுவாள் பளை
முறைப்பாடு:- பரமலட்சுமி கரணவாய் கரவெட்டி
சாட்சி:- ஞானேந்திரம் சந்திரலேகா

★ பண்டாரரத்தினம் செல்வகுமார் (பி-126)
தச்சன்தோப்பு கைதடி;
முறைப்பாடு:- இராசமணி ரத்தினம்கோபாலகிருஸ்ணன்
சாட்சி:- ஜீவபாலன் (பலாலி வீதி கோண்டாவில்)

★ கதிரவேற்பிள்ளை கேதீஸ்வரன் (பி-07)
கைதடி நாவற்குழி
முறைப்பாடு: கேதீஸ்வரன் மனோகரி

★ ஐயாத்தம்பி உதயகுமார் (பி-02)
மீசாலை மேற்கு சாவகச்சேரி
முறைப்பாடு:- கோவிந்தபிள்ளை ஐயாத்தம்பி
சாட்சி:- தெய்வானைப்பிள்ளை

★ அப்புக்குட்டி நாகராசா (ஏ-3ஏ)
மீசாலை தெற்கு
முறைப்பாடு:- நாகராசா திலகவதி

★ வல்லிபுரநாதன் பவானந்தன் (பி-21)
கச்சாய் வீதி கொடிகாமம்
முறைப்பாடு:. வல்லிபுரநாதன் நீலாம்பிகை
சாட்சிகள்:- ஸ்ரீ சத்திய ராஜாநாதன், வல்லிபுரம் பவானி, சின்னத்தம்பி ஏகாந்தராஜா

★ சிதம்பரப்பிள்ளை பேரின்பநாதன் (பி-131)
நாவற்குழி தெற்கு கைதடி
முறைப்பாடு:- சபாபதி சிதம்பரப்பிள்ளை
சாட்சி:- சிதம்பரப்பிள்ளை கௌரி

★ அப்புத்துரை ஜெயரத்தினம் (பி-34)
30/393, கோயில் வீதி, நல்லூர்
முறைப்பாடு:- அப்புத்துரை ஞானரத்தினம்

★ இளையதம்பி திருபாலசந்தன் (பி-39)
மந்துவில் கிழக்கு கொடிகாமம்
முறைப்பாடு:- இளையதம்பி ஆசையம்மா

★ சுப்பிரமணியம் இராசலிங்கம் (பி-99)
மூளாய் சுழிபுரம்
முறைப்பாடு:- சுப்பிரமணியம் செல்வராணி [சங்கானை]
சாட்சி:- விஷ்ணு [உ-10]

## இறுதிப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப்பிரிவு வணிக மானி கற்கை நெறி இறுதி யாண்டு மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி தொடக்கம் 29 ஆம் திகதி வரை நடைபெறுமெனவும்,

பரீட்சார்த்திகளுக்கானநேர அட்டவணை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப் பிரிவுவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-6)

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்

(மல்லாகம்)

இணுவில், உடுவில் சுன்னாகம் ஆகிய பகுதிகளில் தற்போதுபெரும்பாலானவிவசாயிகள் வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதைஅவதானிக்க முடிகிறது.

தற்போது வெங்காயத்தின் விலை சில இடங்களில் கிலோ 100 ரூபா வரை விற்பனை செய்யப்படுவது குறிப்பிடத்தக்கது. (உ)

## புலமைப் பரிசில்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

41) ஞா. தேன்மொழி, வல்வை மகளிர் மகாவித்தியாலயம்
42) சி. சிறிரஞ்சன், துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
43) ச. கீர்த்தன், தாவடி இ. த. க. பாடசாலை
44) சி. லகீசன், மானிப்பாய் சென்ற் ஆனஸ்
45) தி. விஸ்ணுகாந், சங்கானை சைவப்பிரகாச வித்தியாலயம்
46) ப. தாமரா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
47) சி. தனு முகமாலை றோ. க. த. க. பாடசாலை
48) க. கஜந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
49) லூ. அலன்டியந்தா, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
50) த. துவாரகன், கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி
51) அ. கவாஸ்கர், யாழ்.சம்பத்திரிசியார் கல்லூரி
52) க. நிரேஜினி, யாழ்.புனிதமரியாள் வித்தியாலயம்
53) த. தமிழினி, வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி
54) இ. சுஜிபானு, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்
55) ச. கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
56) சு. கோகுலன், புற்றளை மகா வித்தியாலயம்
57) பா. நிருபா, சாவ மகளிர் கல்லூரி
58) வி. ஜெயதீபா, நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்
59) கி. சுஜாதா, தேவரையாளி இந்துக் கல்லூரி
60) இ. செல்வபபிதா, கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம்
61) க. சோபனா, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
62) ம. அனோஜினி, தாவடி இ.த.க. பாடசாலை
63) இ. பிரதிகா சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாசாலை
64) ச. கிரிசாந்தி, யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயம்
65) பா. தயாளினி, மானிப்பாய் விவேகானந்தா வித்தியாசாலை
66) சு. கோகுலன், கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
67) ஆ. திவ்வியா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
68) சி. நிரோஜினி, வல்லை. மகளிர் மகா வித்தியாலயம்
69) ம. இனேஸ் வல்லை மகளிர் மகா வித்தியாலயம்
70) அ. சுடோற்கஜன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
71) அ. சிறஞ்சன், தாவடி இ.த.க. பாடசாலை
72) து. ரயூவன், அளவெட்டிறோ.க.த.க.பாடசாலை
73) ம. சஞ்சியா, தாவடி இ.த.க. பாடசாலை
74) இ. தர்மிகா, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை
75) கா. கஜன், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி
76) ம. சோபிதா, யாழ். இந்து ஆரம்ப பாடசாலை
77) யோ. அபிநயா, தேவரையாளி இந்துக் கல்லூரி
78) அ. விஷ்ணுஜா, கொக்குவில் இந்து ஆரம்பபாடசாலை
79) வி. கலெக்ஷனா, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்
80) ந. சாளினி, கரவெட்டி ஞானசாரியார் கல்லூரி
81) வி. கம்ஷன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
82) த. தர்மராஜ் பளை மத்திய கல்லூரி
83) கு. ஜெசாமினி, தாவடி இ. த. க. பாடசாலை
84) இ. டிலறுக்ஷன், தாவடி இ.த.க. பாடசாலை
85) ம. ஐங்கரன், சாவ. இந்து ஆரம்ப பாடசாலை
86) சு. நிரோசனா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
87) ந. சங்கீதா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
88) ப. பத்மஜா, அல்லாரை அ.த.க. பாடசாலை


யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

**தட்டெழுத்தாளர்**
**சுருக்கெழுத்தாளர் (பெண்)**
**பதவி-தமிழ்**

**கல்வித் தகைமைகள்:-** க. பொ. த (சாதாரணம்) சித்தியடைந்தவராய் இருத்தல் வேண்டும்.
**மேலதிக தகைமைகள்:-** ஆங்கிலதட்டெழுத்திலும் லிகிதர் வேலையிலும் அனுபவம்உள்ளவராய் இருத்தல் வேண்டும்.
**அனுபவம்:-** இரண்டு வருடம் ஏதாவது ஒரு நிறுவனத்தில் கடமை ஆற்றியவராய் இருத்தல் வேண்டும்.
**சம்பளம்:-** நேரில் பேசித் தீர்க்கப்படும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளுடன் அண்மையில் பெறப்பட்ட நற்சான்றிதழ் சகிதம் நாளை [31.05.2001] வியாழக்கிழமை நண்பகல் 1.00 மணிக்கு கீழ்காணும் முகவரிக்கு சமுகமளிக்கவும்;

நிர்வாகம்
யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்
317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[கி-2041]

# உள்நாட்டு யுத்தத்திற்கு எதிராக வெளிநாடுகளில் பிரசாரம் ஏன்?

## நகைப்பிற்கிடமானதென்கிறார் சதாசிவம் எம்.பி

(கொழும்பு)

யுத்தத்தினால் நாட்டில் ஏற்படும் அழிவுகளைத் தடுப்பதற்கு விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கமும் அவர்களுடனான சமாதானப் பேச்சுமே வழிவகுக்கும்.

இவ்வாறு நுவரெலிய மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தினால் பொருளாதார பின்னடைவுகள் மட்டுமல்லாது அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அசுர வேகத்தில் அதிகரித்துள்ளன.

இந் நிலைமை தொடருமானால் பசியும் பஞ்சமுமே யுத்தப் பரிசாக அமையும்.

விடுதலைப் புலிகளுடனான யுத்தம் உள்நாட்டு விவகாரம் என அடிக்கடி கூறி வந்த அரசாங்கம் இவர்களை அழிப்பதும் இவர்களுக்கெதிராக உலக நாடுகளில் பிரசாரம் செய்வதும் ஆச்சரியமாகவுள்ளது.

ஐரிஸ் மக்கள் பிரச்சினையை பிரிட்டிஷ் அரசாங்கம் கையாண்ட முறையை ஒரு எடுகோளாகக் கொண்டு இனப்பிரச்சினையை தீர்ப்பதற்குஇந்தச் சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்தினால் ஜனாதிபதி சந்திரிக்கா வரலாற்றில் இடம்பெற வாய்ப்புண்டு.

தவறின் நாட்டை அழிவுப் பாதையில் இட்டுச் சென்றவர்களில் இவரும் ஒருவராவார் என மக்கள் தீர்ப்பளிப்பர் என்று பாராளுமன்ற உறுப்பினர் சதாசிவம் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

# முதலை கடித்து இளம் பெண் காயம்

[வவுனியா]

குளத்திற்கு சென்ற பெண் ஒருவர் முதலை கடித்துக் காயமடைந்த நிலையில் முல்லை மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் வட்டக்கச்சியில் இடம்பெற்ற சம்பவத்தில் வட்டக்கச்சி பத்து வீட்டுத்திட்டத்தைச் சேர்ந்த சி வசந்தரூபி [வயது ?5] என்பவரே காயமடைந்தவராவார். [உ-5]

## வன்னிப்பகுதி வைத்தியசாலைகளில்

# விஷக்கடி ஊசி மருந்திற்குத் தட்டுப்பாடு

[கொழும்பு]

படையினரின் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிவைத்தியசாலைகளில் பாம்புக்கடி ஊசி மருந்திற்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை, காலாண்டுப் பகுதிக்கான மருந்து வகைகளை அனுப்பி வைக்கும்போதுஆயிரம் பாம்புக்கடி ஊசிமருந்துகளையும் அனுப்பவுள்ளதாக மாகாணப் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் திருமதி எஸ் யோகநாதன் தெரிவித்துள்ளார்.

வன்னிப் பகுதிக்கு மூவாயிரம் ஊசிமருந்துகள் தேவைப்படுகின்றபோதும் ஆயிரம் ஊசி மருந்துகளே அனுப்பப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# ஆலயத்திற்கு அருகில் மதுவெறியர் அட்டகாசம்

[இணுவில்]

இணுவில் சந்தசுவாமி கோயிலுக்கு அண்மையிலுள்ள டனம் காணியில் கள் அருந்துபவர்களது அட்டகாசம் பொறுக்க முடியாத அளவுக்கு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

காலை வேளையிலேயே வந்து கூடும் இக் குடிவெறியர்களால் ஆலயத்தின் அமைதிக்குப்பங்கம ஏற்படுவதுடன்,

அயலில் வசிப்பவர்கள் மற்றும் அவ்வழியால் செல்பவர்கள் பல இடையூறுகளையும் அவமரியாதைகளையும் எதிர்நோக்குவதாகவும் கூறப்படுகிறது. [உ-49]

# திருமலை சிறையில்இருந்த மூவர் யாழ்.கூட்டி வருகை

[யாழ்ப்பாணம்]

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி திருகோணமலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவர், நேற்றைய தினம் கப்பல் மூலம் திருகோணமலை சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் யாழ். சிறைச்சாலைக்கு கூட்டி வரப்பட்டனர்.

இவர்களில் ஜேசுதாஸ் ஜெயசீலன் [திருகோணமலை], காளிதாஸ் பாலச்சந்திரன் ஆகிய இரு கைதிகளும் திருகோணமலை அம்பாறை நீதிவானின் பணிப்பின் பேரில் இன்றைய தினம் தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமில் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

மூன்றாவது நபரான ரி பிறேம்குமார் என்பவர் மீதான வழக்குகள் யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப்படவுள்ள காரணத்தால் அவர் யாழ். சிறைச்சாலையிலேயே தடுத்து வைக்கப்பட்டுள்ளார். [உ-6]

## நயினை நாகபூசணி அம்மன் ஆலய

# உற்சவ காலத்தில் விசேட பேருந்துசேவை

(யாழ்ப்பாணம்)

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் திருவிழாவில்பக்தர்கள் கலந்துகொள்ள வசதியாக துரையப்பா விளையாட்டு அரங்கிலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மூலம் விசேட போக்குவரத்துச்சேவை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் யூன் மாதம் 21 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள ஆலயத் திருவிழா யூலை மாதம் 5 ஆம் திகதி முடிவடையும்வரை, இந்தப்போக்குவரத்துச் சேவை நடைபெறவுள்ளதாக ஆலய திருவிழாவினை முன்னிட்டு யாழ். செயலகத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

மேலதிக அரசாங்க அதிபர் து? வைத்திலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், ஈ.பி.டி.பியின் இந்துசமய விவகாரப்பொறுப்பாளரும் வலிமேற்கு பிரதேச சபைத் தலைவருமான ந. திரிலோசநாதன், நயினை நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ. தியாகராசா, வேலணைப் பிரதேச செயலர் செ. இரத்தினம் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் ஜே. எக்ஸ். செல்வநாயகம், வேலணைப்பிரதேச சபைத் தலைவர் க. கருணாகரகுருமூர்த்தி, 512வதுபிரிகேட்டின் உதவிக் கட்டளை அதிகாரி மேஜர் மாகலியல கடற்படை அதிகாரி லெப்ரினட் விதானாட்சி ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

நயினை செல்லும் பக்தர்கள் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மாத்திரமே பாதுகாப்புப் படையினரால் பரிசோதிக்கப்படுவார்கள் என்றும், இவர்கள் விசேட பேருந்துகளில் பாதுகாப்புப் படையினரின் துணையுடன் துரையப்பா விளையாட்டு மைதானத்திலிருந்து குறிகாட்டுவான்வரை ஏற்றிச் செல்லப்படுவார்கள் எனவும் இக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## வடமராட்சி கிழக்கு

# அபிவிருத்திக்கு9லட்சத்து 25 ஆயிரம் நிதி ஒதுக்கீடு

(மந்திகை)

வடமராட்சி கிழக்குப்பகுதி அபிவிருத்தி திட்டங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து 9 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்துள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர்ஐயாத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் தெரிவித்தார்.

பாடசாலைக் கட்டடங்கள் சனசமூக நிலையங்கள், வீதிகள் அமைப்பதற்கே இந் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-23]

## யாழ். போதனா வைத்தியசாலையின்

# அனைத்துபகுதிகளுக்கும் முழுநாளும் குழாய் மூலம் நீர் வழங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும்கழிவு நீர் எதுவிதத்தடையுமின்றிமுறையாக வெளியேற்ற வடக்கின் அபிவிருத்திபுனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீர் முறையாக வெளியேற்றப்படாமல் தேங்கி நிற்பதாகவும், இதனால் பலத்த சுகாதாரச் சீர்கேடு நிலவுவதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு முறைப்பாடுகள் தெரிவித்ததையடுத்து இந் நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கின் தமிழ் விவகாரங்கள் அமைச்சின் நிதியுதவியுடன் இந்தகழிவு நீர் வெளியேற்றும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

இத்திட்டத்தில் வைத்தியசாலையிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுகள் பாரிய பிளாஸ்ரிக் குழாய்கள் மூலம் கடலுக்குள் வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ். போதனா வைத்தியசாலையின் விடுதிகள் உட்பட அனைத்து பகுதிகளுக்கும் 24 மணிநேரம் குழாய்நீர் வசதி மேற்கொள்ளப்படவுள்ளதாகவும யாழ் நகரத்தின் சுற்றுச் சூழலை மேம்படுத்தவும பல அபிவிருத்தித் திட்டங்களை தாம எடுக்கப் போவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். [உ]

# இராசி பலன்

30-05-2001
[வைகாசி 16, புதன்]
அட்டமி பி.ப. 4.36 வரை
பூரம் பி இ 1.56 வரை
இராகுகாலம் 11.52- 1.22
நல்லநேரம் 4.22- 5.52
அமிர்தம்

**மேடம்**
வியாபாரச் சிறப்பு, புத்திரரால் கவலை, நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும்.

**இடபம்**
உஷ்ண வியாதி, தன்னம்பிக்கைக் குறைவு, காரியதாமதம், தாய் வழிஉறவு.

**மிதுனம்**
வாக்கு மேன்மை, முயற்சி வெற்றி, தனவரவு, இனிய சம்பவம்.

**கடகம்**
விதண்டாவாதம், மதிப்புக் குறைவு, தனவிரயம், காரிய தாமதம்.

**சிங்கம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, சயனசுகம், முயற்சி வெற்றி, நண்பர்கள் உதவி.

**கன்னி**
பிரயாணம், மனக்கிலேசம், காரிய தாமதம், நிலைமாற்றம்.

**துலாம்**
தெய்வதரிசனம், பொருள் வரவு, நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

**விருச்சிகம்**
உத்தியோகச் சிறப்பு, நல்ல செய்தி, முயற்சி கைகூடும், அதிகாரம்.

**தனுசு**
புதிய திட்டமிடல், அச்சமான நிலை, உடல்உழைப்பு, முயற்சி தாமதம்.

**மகரம்**
எதிர்பாராத அச்சம், வீண் தொல்லை, வியாதி, காரிய தடங்கல்.

**கும்பம்**
பிரயாணம், செல்வாக்கு, நல்ல உணவு கிடைத்தல், காரியம் கைகூடும்.

**மீனம்**
பகைவரால்நன்மை, வியாதி குணமடைதல், முயற்சி விருத்தி, மனமகிழ்ச்சி.

(பழைய நேரப்படி கணிக்கப்பட்டது.)

வளவன்

## சாவ. நகரில் வர்த்தக நடவடிக்கை

# 15 வணிகர்கள் அனுமதி கோரி விண்ணப்பம்

(மந்திகை)

சாவகச்சேரி நகர் சென்று தமதுவர்த்தக நிலயங்களைப் புனரமைத்து வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு இதுவரை 15பேர் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளதாக சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவர்களுடைய விண்ணப்பம், மீசாலையில் இயங்கும் சிவில் நிர்வாக காரியாலயத்தில் கையளிக்கப்பட்டுள்ளதாகவும்,

விண்ணப்பம் தொடர்பாக பதிலை மிகவிரைவில் தருவதாக படைத்தரப்பினர் பிரதிநிதிகளிடம் உறுதியளித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-23)

# கைதான இளம்பெண் ஆட்பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

அண்மையில் இடம்பெற்ற மக்கள் குறை நிவர்த்திச் சேவையில் தனது அடையாள அட்டை தொடர்பாக முறைப்பாடு செய்யச்சென்ற வேளை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறை தடுப்புமுகாமில் வைக்கப்பட்ட,

வின்சஸ் லோஸ்ஜின் றெஜீனா [வயது 26] என்ற இளம் பெண் நேற்றைய தினம் யாழ். பதில் நீதவான் திருநாவுக்கரசு முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது,

5 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் செல்ல நீதவான உத்தரவிட்டார். (உ-6)

# தடுப்புமுகாம் விஜயம்

[யாழ்ப்பாணம]

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரி என். ஜீவஸ்வரா இன்று காங்கேசன்துறை கைதிகள் தடுப்பு முகாமிற்கு செல்லவுள்ளார்.

அங்குள்ள கைதிகளைப் பார்வையிடுவதுடன் அவர்களின் உறவினர்களால் வழங்கப்படும் உணவு ம[illegible] கடிதங்கள் [illegible] முடியாயும் எடுக்[illegible]க்கத் தெரிவித்துள்ளனர், (உ-23)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல-19

### ஆக்கம் : சுந்தர்

★ **சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01) 70 – A = 30 எனின் A யிற்கு வழங்கக்கூடிய பெறுமதி
1) 30 2) 40 3) 100

02) வித்தியாசமான எண் கூட்டம் எது?
1) 1,2,3,5 6 2) 3,1,2,5,6 3) 1,3,2,4,6

03) பேருந்து ஒன்றில் இருந்த பிரயாணிகளில் அதிக மானோர் பெண்களாவர் ஆகவே பேருந்தில்
1) ஆண்கள் இல்லை
2) பெண்கள் மட்டும் உள்ளனர்
3) குறைந்தளவு ஆண்கள் உள்ளனர்

04) இலங்கையில் மின் உற்பத்திக்கு பயன்படும் இயற்கை வளம்
1) சூரியவெப்பம் 2) நீர் 3) காற்று

05) இலங்கையில் பயன்படுத்தும் நாணயங்களில் பூ வடிவ ஓரம் உடைய நாணயம்
1) ரூபா 2.00 2) சதம் இரண்டு 3) ரூபா 1.00

★ **சரியான விடையினை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

06) பிந்து, நந்து ஆகிய இருவரும் சுந்துவின் பிள்ளைகள் ஆனால் பிந்து சுந்துவின் மகனல்ல, பிந்து சுந்துவிற்கு என்ன முறை? ——————

07) இலங்கையின் தேசிய மரம் எது? ——————

08) LX XL இனை சுருக்கி விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக? —————

09) மைது நாட்டில் பதிவுத்தபால் ஒன்றிற்கு எவ்வளவு கட்டணம் அறவிடப்படுகின்றது? ——————

10) பாம்பின் இளையது குட்டி போல பசுவின் இளையது —————— ஆகும்.

★ **சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்பினுள் இடுக.**

11) தீப்பெட்டி உருளை வடிவப் பொருளுக்கு உதாரணம் ஆகும். [ ]

12) விளையாட்டுக்கள் மூலம் உடல் தசைகள் இறுக்கமடைந்து வலிமையாகும். [ ]

13) எம்முடன் கற்கும் ஒவ்வொரு மாணவரையும் பட்டப் பெயர் கொண்டு அழைக்கலாம். [ ]

14) அரச வைத்தியசாலைகளில் இலவசமாக மருந்தினைப் பெறலாம். [ ]

15) நான்முகி ஒன்றிற்கு நான்கு முகங்கள் உண்டு. [ ]

★ **கீழ்வரும் சொற்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபட்டது. அதன் கீழ்க் கோடிடுக.**

16) 1) மா 2) பலா 3) வாழை 4) வேம்பு
17) 1) தமிழ் 2) ஆங்கிலம் 3) சிங்களம் 4) விஞ்ஞானம்
18) 1) சிவப்பு 2) குருதி 3) உதிரம் 4) இரத்தம்
19) 1) பிந்து 3) முல்லா 3) நந்து 4) சுந்து
20) 1) கதவு 2) ஜன்னல் 3) வீடு 4) அறை

**இப்பந்தியின் பிரகாரம் கீழ் வரும் கூற்றுக்கள் சரியாயின் (R) எனவும் பிழையாயின் (W) எனவும் எதிரே உள்ள கோட்டினுள் எழுதுக.**

21) உணவு தயாரிக்க நீர், வளி என்பன பயன்படும். ——
22) சந்திரன், சூரியன் என்பன மூலச்சக்தி மூலகங்களாகும். ————
23) சில தாவரங்கள் பூச்சிகளை உணவாகக் கொள்கின்றன. ————

**கீழ்வரும் வினாக்களுக்குரிய விடைகளை புள்ளிக் கோட்டில் எழுதுக.**

24) அழகனுக்கு அழகி என்பது போல் கணவனுக்கு ——— ஆவாள்.

25) நான் உங்கள் சூழலில் உள்ள நீங்கள் வீசும் கழிவுகளை உண்டு வாழ்கிறேன். இதனால் என்னை 'நகரசுத்தி கரிப்பான்' எனவும் அழைப்பார்கள். ஆயினும் நன்றி கெட்ட மனிதர் என்னையே உணவாகக் கொண்டனர். ஆனால் இப்போதோ என்னை அழிக்கின்றனர். என்னைத் தெரிகின்றதா? தெரிந்தால் என் பெயரை எழுதுங்கள்.
———— வி ————

26) ஒரு மோட்டார் சைக்கிளில் 2 லீற்றர் பெற்றோலில் 80 கிலோ மீற்றர் தூரம் செல்லலாம் எனவே, ஒருவன் 400 கிலோ மீற்றர் தூரம் செல்லவுள்ளான். அவனுக்கு எவ்வளவு பெற்றோல் தேவைப்படும்?

27) LX XL இனை சுருக்கி பெறுமானத்தை இந்து அராபிய இலக்கமாக எழுதுக ————

28) ''அகடவிகடம'' இச்சொல்லில் உள்ள எழுத்துக்களைப் பயன்படுத்தி ஒரு எழுத்து மீண்டும் எழுதப்படாவண்ணம் எழுதி புதிய சொல்லொன்றை எழுதுக. ————

★ **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

29) தென்னை அதிகம் வளரும் பிரதேசம்?
1) கடற்கரை 2) மலைப்பகுதி 3) சதுப்புநிலம்

30) pa —— lo —— ns இல் இடைவெளிக்குப் பொருத்தமான எழுத்துக்கள் முறையே?
1) o l 2) l o 3) l,a

31) இலங்கையில் பயன் படுத்தப்படும் நாணயங்களில் சதுர வடிவம் உடைய நாணயம்?
1) ரூபா 2 00 2) ரூபா 1,00 3) சதம் ஐந்து

32) கீழ் வரும் சொற்களில் வேறுபாடான சொல்?
1) நீலம் 2) சிவப்பு 3) காகம்

33) மோப்பசக்தியுடையதும் காவல் துறையினர் பயன்படுத்துவதுமான ஒரு விலங்கு?
1) யானை 2) குதிரை 3) நாய்

34) நீரைத் தூய்மையாக்க கிணற்றினுள் போடப்படும் இரசாயன பவுடரின் பெயர்?
1) யூரியா 2) குளோரின் 3) மலத்தியோன்

35) இலங்கையின் தலை நகரம்?
1) யாழ்ப்பாணம் 2) கொழும்பு 3) கிளிநொச்சி

★ **36-40 வரையான வினாக்களுக்கு தரப்பட்ட சொற்களில் ஒன்று ஏனையவற்றில் இருந்து வேறுபடுகின்றது. வேறுபடும் சொல்லின் கீழ்க் கோடிடுக.**

36) 1) கத்தி 2) கோடரி 3) வாள் 4) சுத்தியல்
37) 1) தை 2) பங்குனி 3) ஞாயிறு 4) மார்கழி
38) 1) இரண்டு 2) ஐந்து 3) நான்கு 4) ஆறு
39) 1) கிளி 2) காகம் 3) மைனா 4) பூனை
40) 1) புத்தகம் 2) பேனா 3) பிளேற் 4) பென்சில்

**அன்பு மாணவச் செல்வங்களே!**

- புலமைப் பரிசில் வினாக்களுக்குரிய விடைகளை எழுதி அனுப்பும் பொழுது பெயர், பாடசாலைப் பெயர் ஆகியனவற்றை தெளிவான கையெழுத்தில் எழுதி அனுப்புங்கள்.
- கூப்பனில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு முன்கிடைக்கக் கூடியதாக உங்கள் விடைகளை அனுப்பி வையுங்கள்.
- தாமதமாகக் கிடைக்கும் விடைகள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது. (ஆ-ர்)

**குறிப்பு :-**
விடைகளை வேறு தாளில் எழுதிஅனுப்பவும் இதற்கான விடைகளை 04-06 2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்

**கல்விப் பகுதி**
**வினா இல- 19**
"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு.
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ………………
சொந்த முகவரி: ………………
கற்கும் பாடசாலை : ………………
மாணவர் கையொப்பம் : ………………

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

## புலமைப் பரிசில் பரீட்சை வினா இல - 18

### அதி கூடியபுள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

01) சு. துவாரகன், யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
02) க. சோபிகா, அல்லாரை அ. த. க. பாடசாலை
03) சி. பகீரதி, வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி
04) நா. அனோஜினி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
05) க. ஆனந், வண்ணை. நாவலர் மகா வித்தியாலயம்
06) க. சங்கை நேசன், யாழ்.இந்து ஆரம்பபாடசாலை
07) சு. பிரமிலா, வட்டு திருநாவுக்கரசு வித்தியாலயம்
08) பி. பிரதீபா, வல்வை சிவகுரு வித்தியாலயம்
09) ச. சக்திதாஜினி, கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை
10) பா. துஷிபந்தன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
11) ஞா. யோசனா, வட்டு. இந்துக்கல்லூரி
12) ச. நவலோஜினி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
13) கு. சிந்துஜ., வல்வை மகளிர் வித்தியாலயம்
14) நி. பிரச ந். அராலி சரஸ்வதி மகாவித்தியாலயம்
15) பு. சஜனா, வல்வை அ. மி. த. க. பாடசாலை
16) ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளைவித்தியாலயம்
17) தி. தனம் ஜெயன், கோபபாய் நாவலர் விததியாலயம்
18) தி. கிருபன், கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை
19) சி. துவாரகன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
20) வ.ஜயந்தன், யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
21) வா. பிரணவன், வல்வை. அ.மி த. க. பாடசாலை
22) மோ. மதன், வலவை. மகளிர் வித்தியாலயம்
23) யோ. சியாந்தினி, யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை
24) சி. கஜாகரன், கொக்குவில் சி. சி. த. க. பாடசாலை
25) வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
26) செ. நிஷாந்தி, இணுவில் மத்தியகல்லூரி
27) இ. வினிபிறட்ஸ்ரீபன், யாழ். புனித பத்திரிசியார்கல்லூரி
28) பா. ஷாயிசங்கர், வட்டு யாழ்ப்பாணக் கல்லூரி
29) ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
30) சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
31) ஞா. ரகுவர்மன், வல்வை. மகளிர் மாகவித்தியாலயம்
32) யோ. தர்சினி, பண்டத்தரிப்பு மகளிர் உயர் கல்லூரி
33) அ. நிருபன், துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
34) வி. மிதிலா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்
35) யோ. வர்சிகா, கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்
36) ப. சஜிந்தன், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்
37) இ. பாமா, துன்னாலை மெ. மி. த. க. பாடசாலை
38) ம. விஜி, பிளவத்தை அ. மி. த. க. பாடசாலை
39) இ. ஸ்ரீராம், சரசாலை ஸ்ரீகணேச வித்தியாலம்
40) சி. நிருபா, மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி

(2ம் பக்கம் பார்க்க)

புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல-18 விடைகள்

1) 5
2) நித்திரை
3) படி, படி
4) அரைகுறை
5) சிறுவன் தாய்
6) அவலட்சணம்
7) வதனம்
8) அல்லி
9) A
10) K
11) M
12) E
13) 75 Cm
14) 1 Kg
15) A
16) XLVIII
17) XXIX
18) XIX
19) XXXV
20) 16 45
21) 2. 00
22) பச்சை
23) 10
24) 5
25) 50 நிமிடம்
26) குடம்
27) மடம்
28) படம்
29) மகுடம்
30) HAT
31) SKY
32) OFFiCE
33) FISH
34) மா, வேம்பு
35) கசம், தடிமன்
36) முட்டை/பால்
37) ஈர்க்கு, நூல், பசை, தாள்
38) சிங்களவர்
39) மகாவலி கங்கை
40) வெளவால்

## நூல்கள் அன்பளிப்பு

[யாழ்ப்பாணம்]
பேராசிரியர் அ. சண்முகதாஸ் தன்னுடைய அறுபதாவது அகவை நிறைவையொட்டித் தாமும், தம்முடைய துணைவியார் மனோன்மணியும் எழுதிய நூல்களிற் சிலவற்றைக் க. பொ. த உயர் தரத்தில் கலைப்பிரிவுள்ள பாடசாலைகள் சிலவற்றுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கவுள்ளார்.

இவற்றைப்பெற விரும்பும் பாடசாலைகள் பீடாதிபதி பணியகம் உயர்பட்ட ஆய்வு பீடம், யாழ். பல்கலைக்கழகம் என்ற முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

நிர்வாக சேவை

## ஆட்சேர்ப்பு பரீட்சை

[யாழ்ப்பாணம்]
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலங்கை நிர்வாக சேவையிலுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான திறந்த மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் மே 25 ஆம் திகதி வர்த்தமானி மூலம் கோரப்பட்டுள்ளன.

இதற்கான பரீட்சைக் கட்டணங்களை அந்தந்தப் பிரதேச செயலகங்களில் செலுத்தலாம். விண்ணப்ப முடிவுத் திகதி ஜூன் 26 ஆகும்.

இதே வேளை இப்பரீட்சையில் ஏற்கனவே இரண்டு தடவைகள் தோற்றியவர்கள் இனித் தோற்ற முடியாது என சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
(உ-10)

பெருந்தொகை

## பால் வருகை

(மல்லாகம்)
திருநெல்வேலி பாற்சாலைக்குத் தினமும் பெரும் தொகையானபால் கால்நடை வளர்ப்பவர்களிடமிருந்து கிடைப்பதாக பால்ற்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ-122)

## இன்று ஒரு தகவல்

# தொலைக் காட்சி

ஒரு நண்பர் என்னைத்தேடி ஓடிவந்தார். அவருக்கு ஏற்கனவே தண்ணி போடுகிற பழக்கம் உண்டு. மதுப்பழக்கம் உடல் நலத்துக்கு மிகவும் கெடுதலை உண்டுபண்ணும் என்பதை அனுபவப்பட்டுப் புரிந்து கொண்டார். அதன் பின்னர் அந்தப் பழக்கத்தை விட்டு விட்டார். இப்போது அவர் நிதானமான ஆள் அப்படியிருந்தும் அவசரமாக ஓடி வந்தார். என்ன விஷயம் என்று விசாரித்தேன்.

'சார்; எங்கள் வீட்டு ரி.வி. யிலே படமெல்லாம் இரண்டு இரண்டாகத் தெரிகிறது என்றார். நானும் கொஞ்சம் நிதானமாகவே அவரிடம் விசாரித்தேன்.'

ஏன் சார் ரீ.வி பெட்டியே இரண்டாகத் தெரிகிறதா? அல்லது ரீ.வி. யிலே உருவம் இரண்டாகத் தெரிகிறதா என்று கேட்டேன். உருவம் தான் இரட்டையாகத் தெரிகிறது என்றார். அப்படியென்றால், குறை நிச்சயமாக இவரிடம் இல்லை. என்று முடிவு செய்துகொண்டேன். உடனே புறப்பட்டுப்போய் நானும் பார்த்தேன். என் கண்ணுக்கும் உருவம் இரட்டையாகத் தான் தெரிந்தது. அதற்கப்புறம் நாங்கள் இரண்டுபேரும் புறப்பட்டு இன்னொரு சிநேகிதர் வீட்டுக்குப் போனோம். அவர் ஒரு தொழில் நுட்பவல்லுநர். அவரிடம் விபரத்தைச் சொன்னோம்.

அன்ரெனாவிலே ஏதோ குறையென்று அங்கேயிருந்தே அவர் கண்டு பிடித்துவிட்டார். அவரை அழைத்துக் கொண்டு வந்து காட்டினோம் வந்து பார்த்தார். உயரமான சுவருக்குப் பக்கத்திலே அது இருக்கிறது. அதனாலே தான் படம் அப்படி தெரிகிறது என்றார்.

அதைக்கொஞ்சம் இடத்தை மாற்றிப்பொருத்திக் கொடுத்தார். இப்போது படம் நன்றாகத்தெரிந்தது எங்கள் இரண்டு பேருடைய கண்களுக்கும் சேர்ந்து படம் ஒன்றாகத்தான் தெரிந்தது. உயரமான சுவருக்குப் பக்கத்திலேயோ அல்லது மேல் நிலைத் தண்ணீர்த் தொட்டிக்கு பக்கத்திலேயோ அல்லது உயரமான மரத்துக்குப் பக்கத்திலேயோ அன்ரெனா இருக்கக் கூடாது. அப்படி இருந்தால் ரீ வி யிலே உருவம் இரட்டையாகத்தான் தெரியும்.

எவ்வளவோ செலவு செய்து ரீ வி. வாங்குகிறோம். அதை எப்படிப் பார்க்கிறது என்பதைப்பற்றிக் கொஞ்சம் தெரிந்திருக்கிறது நல்லது. முதலில் உங்கள் ரீ.வி. பெட்டியை சுவருக்குப் பக்கத்திலோ அல்லது பீரோவுக்குப் பக்கத்திலோ மிகவும் நெருக்கமாக ஒட்டி வைக்கக் கூடாது. குறைந்த பட்சம் அரை அடி தூரமாவது இடை வெளி இருக்க வேண்டும். எதற்கு? நீங்கள் போய்வருவதற்கா? அதற்காக இல்லை! காற்று தாராளமாகப்போய்வருவதற்காக காற்றோட்டம் தாராளமாக இருக்க வேண்டும். அப்போது தான் ரீ.வி. செற் சூடு ஏறாமல் இருக்கும். ரீ வி. செற்றினுடைய பின்புறத்தில் காற்றோட்டம் தாராளமாக இருக்க வேண்டும். இது மிகவும் முக்கியம். பலர் ரீ.வி. மேல் உறை போட்டு மூடி வைப்பார்கள். ரீ.வி. யை அணைத்தவுடனே அந்த உறையை மாட்டிவிடக் கூடாது. சூடு ஆறுவதறகுப் போதுமான அவகாசம் கொடுக்க வேண்டும். அரை மணி நேரத்துக்கப்புறம் உறையை மூடலாம்.

நடை முறையில் யாரும் இப்படிச் செய்வதாகத் தெரியவில்லை ஏனென்றால் போட்ட உறையை யாரும் சுழற்றுவதேயில்லை. எப்படியிருந்தாலும் சரி ரீ.வி. செற்றில் சூடு ஏறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ரீ.வி. பெட்டி மேல் சூரிய வெளிச்சம்படாத இடமாகப் பார்த்து வைக்க வேண்டும். வெய்யில்படாமலிருக்க வேண்டும் என்றால் ஈரம் படலாமென்று அர்த்தம் இல்லை. ஈரப்பசையும் அங்கேயிருக்கக் கூடாது.

சிலர் பூச்சாடிகளை ரீ வி. பெட்டிக்கு மேலேயோ, பக்கத்திலேயோ வைத்திருப்பார்கள். இது மிகவும் தப்பு ரீ வி. யைப் பார்த்து முடித்தகையோடே ரீ வி.யை அணைத்து விடவேண்டும். புளக் பொயின்ரில் உள்ள ஸ்விட்சையும் அணைத்துவிட வேண்டும். அதேமாதிரி ரீ.வி. யைப் போடுகிறபோது முதலில் பிளக் பொயின்ட் ஸ்விட்ச் அதற்கப்புறம் ரீ.வி. ஸ்விட்சை போட வேண்டும். வெளிச்சம் இல்லாத அறைக்குள் உட்கார்ந்து ரீ.வி. பார்க்கிறது கண்ணுக்குக் கெடுதல் உங்களுக்குப பின்னால் 40 வாட் அல்லது 60 வாட் பல்ப்பை எரிய விட்டுவிட்டு ரீ.வி. பாருங்கள். அதுதான் நல்லது கண்கள் நன்றாக இருந்தால் தான் காட்சியை ரசிக்க முடியும். அதனாலே கண்ணைக் கவனித்துக் கொள்ளுங்கள்.

இவையெல்லாம் பலருக்குத் தெரிந்த விடயம் தான். இருந்தாலும் ஞாபகப்படுத்துவதில் தப்பு ஒன்றுமில்லை. எங்க வீட்டுக்காரர் எப்போது பார்த்தாலும் ரீ.வி. யையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்துஇருக்கிறார்கள் என்று ஒரு அம்மா டாக்டரிடம் வந்து சொன்னார். 'அதில் தப்பு என்ன; என்றுகேட்டார் டாக்டர் கரண்ட் இல்லாத போது கூட ரோச்லைட்டை அடித்தாவது அதைப் பார்த்துக் கொண்டு இருக்கிறாரே, அது தான் சந்தேகமாக இருக்கிறது; என்றார் அந்த அம்மா. இதற்கு அன்ரெனாவைச் சரி செய்து பயனில்லை. அவரையே சரி செய்ய வேண்டும்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

# அமைச்சர் மகிந்தராஜபக்ஷ இந்தியா பயணம்

[கொழும்பு]

நீரியல்வள மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த ராஜபக்ஷ நேற்று முன்தினம் இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

இந்தியாவில் தங்கியிருக்கும் அமைச்சர் ராஜபக்ஷ அங்கு விவசாய அமைச்சர் மற்றும் மீன்பிடித்துறை அமைச்சர் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

இந்திய கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன்பிடித்ததாக கைது செய்து இந்தியச்சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் விடுதலை தொடர்பாகவும் இலங்கைக் கடல் எல்லைக்குள் அத்துமீறி மீன் பிடித்ததனால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவரின் நிலைமை குறித்தும் அமைச்சர் ராஜபக்ஷ இந்திய அமைச்சர்களுடன் விரிவாக பேச்சு நடத்தவுள்ளார்.

இதேவேளை இந்திய கடல் எல்லையில் அத்துமீறி பிரவேசித்து மீன் பிடித்தனரென்ற குற்றச் சாட்டின் பேரில் 64 இலங்கை மீனவர்கள் இந்தியச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

# பரீட்சைக்குத் தோற்றும் வருடத்தில் பல்கலை அனுமதி வழங்கத் திட்டம்

## 2002 முதல் புதிய நடை முறை

(கொழும்பு)

2002 ஆம் ஆண்டில் க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி பல்கலைக் கழகத்தில் பயிலதகுதியுடையவர்களை அதே வருடத்திலேயே பல்கலைக் கழகங்களில் படிப்பைத் தொடர்வதற்கான புதிய திட்டம் ஒன்றை வகுத்திருப்பதாக உயர்கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றும் காலத்திற்குப்பல்கலைக் கழக அனுமதி கிடைப்பதற்கும் இடையேயான இடைவெளியைக் குறைக்கும் வகையிலேயே இப்புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாகவும், தொழில் நுட்பப்பல்கலைக் கழகம் ஒன்றை அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதியளித்திருப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

(கொழும்பு)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு மருந்து வகைகள் கொண்டு செல்வதிலும், அங்கு நிலவும் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்குவதிலும் புதிய கொள்கை ஒன்றை அமுலுக்கு கொண்டு வருமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது. (உ-5)

## சந்தைக்கு மின்சாரம் இல்லை

(சங்கானை)

சங்கானை மரக்கறிச் சந்தைக்கு வழங்கப்பட்டு வந்த மின்சாரம், இவ் வருட ஆரம்பத்திலிருந்து நிறுத்தப்பட்டமையால், அதிகாலை வேளைகளில் வியாபாரிகள் பெரிதும் சிரமத்திற்குள்ளாவதாகக் கூறப்படுகிறது. (உ-123)

## குடிசன மதிப்பீடு ஜூலை 5 வரை

[கொழும்பு]

இறுதிக் கட்ட சனத்தொகை மதிப்பீடுகளை ஜூன் மாதம் 25 ஆம் திகதி தொடக்கம் ஜூலை 5 ஆம் திகதி வரை மேற்கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகக் குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் விமல் நாணயக்கார தெரிவித்துள்ளார். (உ-5)

## அ. அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

432/4 மடம் வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியைச் சேர்ந்த சின்னத்தங்கச்சி சின்னவன் என்பவருடைய விசேட அடையாள அட்டை வீதியில் கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும். [உ]

## சீருடைகள் மீட்பு

(கொழும்பு)

களுத்துறை மீகாதென்ன பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து பன்னிரெண்டு இராணுவ சீருடைகளும் வெடிபொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டன. (உ-5)

## இன்று மகஜர் கையளிப்பு

வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட யாழ்.மாவட்ட மாணவர்கள் ஒன்றிணைந்து, தமது நிலையை விளக்கும் மகஜர் ஒன்றினை இன்றைய தினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கையளிக்கவுள்ளனர். [உ]

## ஜனாதிபதி மாளிகை புனரமைப்பு நிதிகுறித்து சபையில் கேள்வி

(கொழும்பு)

கொழும்புக் கோட்டையிலிருக்கும் ஜனாதிபதி மாளிகையை புனரமைப்பதற்கு 1998 ஆம் ஆண்டு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் உத்தரவுக்கமைய, 98 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாக பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரமநாயக்கா கடந்த வாரம் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

ஐக்கியதேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

இதேவேளை, ஜனாதிபதி மாளிகை புனரமைப்பு செய்து கொண்டிருந்த காலப்பகுதியிலேயே புதிய ஜனாதிபதி செயலகம் அமைக்கவும், ஜனாதிபதி வாசஸ்தல அமைப்புக்கும் 1.7 மில்லியன் ரூபா செலவில் திட்டம் வகுக்கப்பட்டது. இதில் ஜனாதிபதி வாசஸ்தல அமைப்புக்கு மாத்திரம் 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது

பொருளாதார நெருக்கடி மற்றும் சீரற்ற நிதி நிலைமை உள்ளபோதும் ஆடம்பரச் செலவுகளை அரசு அதிகம் மேற்கொள்வதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சாட்டி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது (இ)

## கைக்குண்டுகளுடன் இரு இளைஞர்கள் கைது

(ஏறாவூர்)

ஏறாவூர் ஐயங்கேணிப் பிரதேசத்தில நேற்று முன்தினம் காலை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர், கைக்குண்டுகளுடன் இருவரை கைதுசெய்ததாகப் பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வந்தாறுமூலையைச் சேர்ந்த வே. உதயகுமார் (வயது 27), த கோணநாயகம் (வயது 22) ஆகியோரே செங்கலடி இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காக மட்டக்களப்பு நாசகார தடுப்புப் பொலிஸ் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [உ-108]

## கோப்பாய்பி.செயலர் பிரிவில் புதிய அபிவிருத்தி திட்டங்கள் வகுப்பு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் பிரதேச அபிவிருத்திக்காக 10 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிதியானது, அண்மையில நடைபெற்ற யாழ். தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந் நிதி ஒதுக்கீட்டினைப் பயன்படுத்தி யுத்த நடவடிக்கைகளினால் சேதமடைந்த பொதுக் கட்டடங்கள், சனசமூக நிலையங்கள, பாலர் பாடசாலைகள் ஆகியன புனரமைப்புச் செய்யவுள்ளதுடன் கோப்பாய்ப் பிரிவிலுள்ள உயர் பாடசாலைகளுக்கு கணனிகளும வழங்கப்படவுள்ளதாகவும கோப்பாய் பிரதேச சபைத் தலைவர் பூ. குணசிங்கம தெரிவித்துள்ளார்.

மேலும, வடக்கின புனர்வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையின நிதி ஒதுக்கீடு இன்னமும கிடைக்க வில்லை எனவும இந் நிதி கிடைக்கப் பெற்றதும கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில மேலும பல அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட பல திட்டங்கள வகுக்கப்பட்டுள்ளதாகவும், பிரதேச சபைத தலைவர் தெரிவித்துள்ளார். [உ]

## வீடுகளைப் பார்வையிடுவதில் இராமசேவையாளர் இன்றி மறவன்புலோ மக்கள் அவதி

(மந்திகை)

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் மறவன் புலோ கிராம அலுவலர் பிரிவுக்கு நிரந்தர கிராமசேவையாளர் இல்லாமையால் அப்பகுதிக்குச் சென்று தமது வீடுகளைப் பார்வையிட முடியாதுள்ளதாகப் பொது மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

நிரந்தரமாக கடமையாற்றிய கிராம சேவையாளர் இடமாற்றப்பட்டதையடுத்தே இவ்வெற்றிடத்திற்கு பதில் கடமை புரிவதற்கு அயல் கிராம சேவையாளர் நியமிக்கப்பட்டிருந்தார்.

இருப்பினும வீடுகள் பார்வையிட அனுமதிக்கோரி சிவில் நிர்வாக அலுவலகம் செல்லும இப்பகுதி பொதுமக்களுக்கு பதில கிராம அலுவலரைத் தவிர்த்து உரிய கிராம அலுவலரைக கூட்டி வருமாறு பணிக்கப்படுகிறதாம்.

இதனால் நீண்ட காலங்களுக்குப்பின் தமது வீடுகளைப் பார்ப்பதற்கு விருப்பம் கொண்ட மக்கள நிரந்தர கிராம அலுவலர் இன்றி, வீடுகளைப் பார்க்க முடியாதுள்ளதாகத் தெரிவித்துள்ளனர், (உ-23)

# இஸ்ரேல் மீது சுமத்திய குற்றங்களை ச. செ. ச. வாபஸ் வாங்கியது

## அமெரிக்காவின் அச்சுறுத்தலின் எதிரொலி

(வாஷிங்டன்)

ஸ்ரேல் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டு வருவதாக இனிமேல் தாம் விமர்சனம் செய்யப் போவதில்லையென சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல்-பலஸ்தீனப் பகுதிகளுக்கான செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளின் தலைவர் ரீன்கொஸிரினிக் அண்மையில்வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இஸ்ரேலின் செயல் பற்றி விபரிக்கையில் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் ஒரு அரசானது தனது மக்களை குடியமர்த்தும் செயல் ஒரு யுத்தக் குற்றச்செயல் என தெரிவித்திருந்தார்.

இவரது கருத்தை வன்மையாகக் கண்டித்த அமெரிக்கா காங்கிரஸ் உறுப்பினர் எலியட் எஞ்சல் செஞ்சிலுவைச் சங்கத்தின் மேற்படி விமர்சனத்தை வாபஸ் பெறாவிட்டால் இச்சங்கத்திற்கான அமெரிக்க நிதி உதவிகள் நிறுத்தப்படுமெனவும் எச்சரித்திருந்தார்.

எலியட் எஞ்சலின் மேற்படி கண்டனத்துக்கு பதில் அனுப்பிய கடிதத்திலேயே செஞ்சிலுவைச்சங்கத் தலைவர் ரீன் கொஸிரினிக்கினது கருத்து தவறானது என மன்னிப்புக் கோரியுள்ளார். [உ-9]

## அரசியலில் இருந்து ஓய்வு குறித்த செய்திக்கு அவுஸ் பிரதமர் மறுப்பு

(கன்பரா)

நடைபெறவுள்ள புதிய தேர்தலையடுத்து அவுஸ்திரேலியப் பிரதமர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவார் என்று வெளியான செய்திகளை அவுஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹோவார்ட் மறுத்துள்ளார்.

இன்னும் ஒரு வருடகாலத்திற்கு அரசியலிலிருந்து விலகும் உத்தேசம் தனக்கு இல்லையென பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடுத்த பதவிக்காலத்தில் நிறைய விடயங்களைத் தான் சாதிக்க வேண்டியுள்ளதெனவும் அவுஸ்திரேலிய நாட்டின் முன்னேற்றத்திற்கு தான் பாடுபடப் போவதாகவும் பிரதமர் ஜோன்ஹோவார்ட் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அவுஸ்திரேலியாவில் இவ்வருட இறுதியில் தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

# சட்டவிரோதமான ஆட் கடத்தல் தடுப்பதற்கு முயற்சி எடுக்கவேண்டும்

## சர்வதேச தொழில் ஸ்தாபனம் தெரிவிப்பு

(ஜெனிவா)

சட்டவிரோதமான ஆட்கடத்தல் மற்றும் பலவந்தமாக வேலைக்கமர்த்தல் என்பன உலகில் அதிகரித்து வருவதாக ஜெனிவாவைத் தளமாகக் கொண்டியங்கும் சர்வதேச தொழில் ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

வறிய நாடுகளில் இருந்து அமெரிக்காவிற்கு மாத்திரம் வருடாந்தம் 50 ஆயிரம் பெண்களும் சிறுவர்களும் கடத்தப்பட்டு வருவதாக அவ்வமைப்பு மேலும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கடத்தப்படுபவர்கள் பாலியல் தொழில் மற்றும் வீட்டு வேலைகள் என்பவற்றில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகவும்,

எனினும், சட்டவிரோதமாக ஆட்களைக் கடத்தும் அமைப்புக்களைக்கண்டுபிடிப்பது கடினமாகவுள்ளது எனவும்,

அவ்வாறு கண்டுபிடித்தாலும்அவர்களுக்கு போதிய தண்டனை வழங்கப்படுவதில்லையெனவும் சர்வதேச தொழில் ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (உ-9)

## இந்தோ. அதிபரின் அவசர காலநிலை பிரகடனம் அறிவிப்பில் மாற்றம்

## அணுகுமுறைகளில் நெகிழ்வு

(ஜகார்த்தா)

இந்தோனேஷிய அதிபர் மீது கண்டனத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் வரவிருக்கிறது.

நாடாளுமன்றத்தின்இந்தச் செயற்பாடடையடுத்து சட்டத்தையும், ஒழுங்கையும் நிலை நாட்டும்படி பொலிஸாருக்கும் இராணுவத்துக்கும் அதிபர் அப்துல்ரஹ்மான் வாஹிட் கட்டளை பிறப்பித்துள்ளார்.

ஏற்கனவே அவசர கால நிலை பிரகடனப்படுத்துவதென அறிவித்திருந்த வாஹிட் இப்பொழுது சற்றுத் தணிந்து சிறப்பு நடவடிக்கைகள் மாத்திரம் எடுக்கும்படி பாதுகாப்பு அமைச்சரிடம் பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது (து)

## பாக். மீனவர்களை இந்தியா சிறைப்பிடிப்பு

(இஸ்லாமபாத்)

கடந்த சில நாட்களாக இந்தியக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்த 27 பாகிஸ்தானிய மீனவர்கள் இந்தியப் பொலிஸாரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி 27 மீனவர்களையும் விடுவிக்க பாகிஸ்தான் அரசு நடவடிக்கைஎடுத்துவருவதாகவும் இது தொடர்பாக இந்திய அரசு சாதகமான பதிலை அளித்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (உ-9)

## இந்து தீவிரவாதத்தலைவர் குண்டுத்தாக்குதலில்காயம்

(புதுடில்லி)

வட இந்திய நகரமான வைப வாக்கில் இந்து தீவிரவாதத்தலைவர் உட்பட நால்வர் குண்டுத்தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

கோபால்தாஸ் என்ற இந்து தீவிரவாத அமைப்பின் தலைவர் ஆற்றில் நீராடிக் கொண்டு இருந்த போது குண்டுத்தாக்குதலுக்கு இலக்காகியிருந்தார்.

விஷ்வகிந்துவின் முக்கிய தலைவரான இவர் பழமை வாய்ந்த பாபர்மசூதி இடிப்புக்கு முக்கிய காரணகர்த்தாவாக இருந்தவர் என்றவகையில் இக் குண்டுத்தாக்குதல் இடம்பெற்றிருக்கலாமென்று கருதப்படுகிறது.

இருந்த போதும் நகரப் பொலிஸார் கோபால்தாஸ் சம்பந்தமான குண்டுவெடிப்புப்பற்றி தக்ககாரணங்களை இன்னும் தெரிவிக்கவில்லை. (து)

### செய்திப்பரல்

★ சீனா தொடர்ச்சியான இராணுவ ஒத்திகைகளை நிகழ்த்தி வருவதாக தாய்வான் குற்றம் சாட்டியுள்ளது.

★ முஸ்லிம்அல்லாதவர்கள் மஞ்சள் பட்டி அணிய வேண்டும் என்ற தலிபான் ஆட்சியாளர்களின் உத்தரவை கனடா வன்மையாகக் கண்டித்துள்ளது.

★ ஜனாதிபதி வாஹிட்டின் ஆட்சிக்கு எதிரான அரசியல் நெருக்கடியை சமாதான முறையில் தீர்த்தால் இந்தோனேஷியாவை அமெரிக்கா ஆதரிக்கத் தயார் என வாஷிங்டன் வட்டாரங்கள் கூறியுள்ளன.

★ முன்னாள் பேரு ஜனாதிபதி பியூஜிமோரிக்கு எதிராக அந் நாட்டு அட்டோர்னிக்ஜெனரல் கொலைக்குற்றம் சுமத்தியுள்ளார். (உ-9)

### உலக தரிசனம்

## திமோதியின் மரணதண்டனை

அமெரிக்காவில் இடம்பெற்ற ஒக்லஹோமா குண்டு வெடிப்பின் சூத்திரதாரியான திமோதி மெக்வெய் மீதான மரணதண்டனை எதிர்வரும் ஜூன 11 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளதென உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தினத்தன்று திமோதியின் மரணதண்டனை நிறைவேற்றுவதில் எந்தத்தடங்கலும் இருக்காது என அமெரிக்க அட்டோர்னிக் ஜெனரல் நம்பிக்கை தெரிவித்துள்ளார். (உ-9)

## தொழிலாளி காயம்

[மந்திகை]

பருத்தித்துறை இறங்குதுறையில் சஜந்த கப்பலுக்கு புகையிலை சிப்பம் ஏற்றுவதற்காக பாஜ்ஜில் அதனை ஏற்றிக் கொண்டிருந்த வேளை சிப்பம் தவறி வீழ்ந்ததில் காயமடைந்த தொழிலாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டி இராஜ கிராமத்தை சேர்ந்த கார்த்திகேசு தயேந்திரன் [வயது 21]என்பவரே பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (உ-23)

## பொது கூட்டம்

(இணுவில்)

இலங்கைத தமிழர்ஆசிரியர் சஙக உடுவில்கிளையிலவிசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் சனிககிழமை மு ப. 10.00 மணிக்கு இணுவில் மத்தியகல்லூரி மண்டபத்தில் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க. சிவாஜி தலைமையிலநடைபெறவுள்ளது.

ஆசிரியர்கள் சம்பளமுரண்பாடுகள் குறித்து இக்கூடடத்தில் ஆராயப்படவுளளது. [உ-49]

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய கொடியேற்றம் அடுத்த மாதம் 4 ஆம் திகதி ஆரம்பமாகி 12 ஆம் திகதி நற்கருணை வழிபாடும் 13 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு திருச்சொரூப திருப்பவனியும் இடம்பெறவுள்ளது. (உ-104)

## ஆதரவு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம்பல்கலைக்கழக மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட பொங்கு தமிழ்ப் பிரகடன வாசகங்கள் அடங்கிய பதாகை திரை நீக்க நிகழ்விற்கு தொழில் நுட்பக் கல்லூரி பகல்நேர மாணவர் ஒன்றியத்தினர் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளனர். [உ]

## கட்டிலால் வீழ்ந்து புற்றுநோயாளி மரணம்

[யாழ்ப்பாணம்]

கட்டிலால்தவறி வீழ்ந்தவர் மரணமானசம்பவம் யா/போதனாவைத்தியசாலையில் கடந்ததிங்களன்று இடம் பெற்றுள்ளது.

புற்றுநோய் காரணமாக யா போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஏ.திரேசா (வயது70) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

கட்டிலுக்குப் போடப்பட்டிருந்த தடை அகற்றப்பட்ட நிலையில் தவறி வீழ்ந்த நோயாளி தலையில் பலத்த காயத்துக்கு உள்ளானதுடன் அன்றிரவே மரணமானதாகத்தெரியவந்துள்ளது. [உ-104]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

மே மாதம் 28 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன.

### சாவகச்சேரி

| | |
|---|---|
| 188141 ஏ | 188141 பி |
| 188141 சி | 190023 ஏ |
| 190023 பி | 190023 சி |
| 190133 ஏ | |

### கரவெட்டி

| | |
|---|---|
| 181294 ஏ | 181294 பி |
| 181294 சி | 181357 ஏ |
| 181357 பி | 181357 சி |
| 181357 டி | 184001 ஏ |
| 185515 ஏ | 185515 பி |
| 185515 சி | 185551 ஏ |
| 185559 ஏ | 185559 பி |
| 185629 ஏ | 185629 பி |
| 185629 சி | 185629 டி |
| 185629 ஈ | 185813 ஏ |
| 185813 பி | 188115 ஏ |
| 188118 ஏ | 188118 பி |
| 188315 ஏ | 188315 பி |
| 188315 சி | 188349 ஏ |
| 188370 ஏ | 188401 பி |
| 188504 ஏ | 188504 பி |
| 189813 ஏ | 189813 பி |
| 189813 சி | 189813 டி |
| 189814 ஏ | 189878 ஏ |
| 189878 பி | 189911 ஏ |
| 189911 பி | 189911 சி |
| 189931 ஏ | 189931 பி |
| 189945 ஏ | 189945 பி |
| 189948 ஏ | 189964 ஏ |
| 189964 பி | 189970 ஏ |
| 189970 பி | 190012 ஏ |
| 190026 ஏ | 190067 ஏ |
| 190069 ஏ | 190069 பி |
| 190076 ஏ | 190076 பி |
| 190079 ஏ | 190085 ஏ |
| 190085 பி | 190085 சி |
| 190085 டி | 190105 ஏ |
| 190141 ஏ | 190167 ஏ |
| 190167 பி | 190182 ஏ |
| 190182 பி | 190234 ஏ |
| 199244 ஏ | 190248 [illegible] |
| 190248 பி | 190255 ஏ |
| 190255 பி | 190262 ஏ |
| 190262 பி | 190262 சி |
| 190294 ஏ | 190296 ஏ |
| 190298 ஏ | 190298 பி |
| 190298 சி | 192495 ஏ |
| 192496 ஏ | |

### பருத்தித்துறை

| | |
|---|---|
| 159032 ஏ | 180615 ஏ |
| 180615 பி | 180615 சி |
| 180615 டி | 181199 ஏ |
| 181199 பி | 183564 ஏ |
| 183564 பி | 183565 ஏ |
| 183565 பி | 183565 சி |
| 183856 ஏ | 183856 பி |
| 183941 ஏ | 185429 ஏ |
| 189491 ஏ | 185643 ஏ |
| 185643 பி | 188149 ஏ |
| 188185 ஏ | 188185 பி |
| 188185 சி | 188328 ஏ |
| 188373 ஏ | 188373 பி |
| 188373 சி | 188383 ஏ |
| 188470 ஏ | 180900 ஏ |
| 189900 பி | 189925 ஏ |
| 190027 ஏ | 190027 பி |
| 190036 ஏ | 190036 பி |
| 190041 ஏ | 190041 பி |
| 190041 சி | 190051 ஏ |
| 190051 பி | 190051 சி |
| 190058 ஏ | 190123 ஏ |
| 190123 பி | 190123 சி |
| 190146 ஏ | 190146 பி |
| 190158 ஏ | 190158 பி |
| 190158 சி | 190181 ஏ |
| 190181 பி | 190181 சி |
| 190181 டி | 190204 ஏ |
| 190221 ஏ | 190260 ஏ |
| 190297 ஏ | 192497 [illegible] |
| 192521 ஏ | 192553 ஏ |
| 192594 ஏ | 192594 பி |
| 192594 சி | |

அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்

குறள்

# வலம்புரி

## வயதெல்லை பாதிப்பு

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 1999ம் ஆண்டு நடைபெற்றபோது எந்தவொரு தமிழர்களும் தெரிவாகவில்லை என்ற உண்மை மௌனித்துப் போய்விட்ட செய்தியாகும் இந்நிலையில் இலங்கைநிர்வாக சேவையில் தமிழர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு குறைவடைந்து விட்டது.

இதன் காரணமாக வடக்குக் கிழக்கு மாகாண சபை உட்பட முக்கிய நிர்வாகத் துறைகளில் அறுபது கடந்தவர்களே கடமையில் உள்ளனர். இதனால் புதியவர்களுக்கு சந்தர்ப்பமே இல்லாது போவதனால், திறமைமிக்க மனித மூலதனம் வீணடிக்கப்படுகிறது.

ஒரு நாட்டின் நிர்வாக முகாமைத்துவத்தில் அனுபவமானவர்கள் இருப்பது அவசியமெனினும் அனுபவமானவர்களோடு இளம் வர்க்கத்தினரும்நிர்வாக முகாமைத்துவத்தில் ஈடுபடுத்தப்படும் போதே விரைவானதும், திறமையானதுமான தீர்மானங்கள் எடுக்கப்பட முடியும்

இந்நிலையில் இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பதற்கு வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கென தனியாக விண்ணப்பங்கள்கோரப்பட்டுள்ளது இவ்வாறு தமிழ் பிராந்தியத்திற்கென தனித்து விண்ணப்பம் கோரப்பட்டிருப்பது வரவேற்கப்படவேண்டியதாகும்.

எனினும் கோரப்பட்ட விண்ணப்பத்திற்கான வயதெல்லை 30ஆக வரையறுக்கப் பட்டிருப்பதால் 99ம் ஆண்டில் நிர்வாக சேவைப் பரீட்சைக்குத் தோற்றி அதியுயர்ந்த புள்ளிகளைப் பெற்றும், நியமனம் கிடைக்காது பாதிக்கப்பட்டவர்களுக்கு எந்த விதமான நிவாரணமும் இல்லாமல் போகும்.

எனவே பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் கிடைக்க வேண்டுமாயின் வயதெல்லை 35ஆக வரையறுக்கப்படவேண்டுமென்பது மிகவும் முக்கியமானதாகும்

இவ்வாறு வயதெல்லையை 35ஆகவரையறுக்கும் போது திறமையானவர்களைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பு அதிகமாவதுடன்,

வயதெல்லையால் திறமையானவர்கள் நிர்வாக சேவையில் இணைவது தடுக்கப்படும் தவறான முடிவுக்கும் முடிவுகட்டுவதாக அமையும்

# தென்னைகளில் வரும் தண்டுக் கசிவு நோயும் அதனைக் கட்டுப் படுத்துவதற்கான வழிகளும்

யாழ்: குடாநாட்டில், பல இடங்களில் தென்னையைத் தாக்கும் தண்டுக் கசிவுநோய் (Stem bleeding) பரவி வருகின்றது. இந் நோயினால் தாக்கப்பட்ட ஒரு தென்னையானது ஒரு வருடத்தினுள் படிப்படியாக இறப்படையும். இந்நோய் பல்வேறு காரணங்களினால் ஏற்படுகின்றது; முக்கியமாகத் தென்னை மரத்தின் தண்டில் காயங்கள் ஏற்பட்ட பகுதியினூடாக பெருமழை அல்லது வெள்ளம், தீயினால் ஏற்படும் சேதம் செவ்வண்டுத் தாக்கம் மேலதிக உரமிடல் மேலதிக பூச்சிநாசினி ஏற்றல் போன்ற காரணங்களாகும்.

இத்தண்டுக்கசிவுநோயினை எப்படி அடையாளம் காண்பது?

இந்நோயின் ஆரம்ப நிலையில் மரப்பட்டையில் வெடிப்புகள் ஏற்படும். 'செரற்ரோசிஸ்ரிஸ் பரடொக்சா' (Ceratocystis paradoxa) என்ற பங்கசு பலவீனமடைந்த இழையங்களை ஊடுருவுகின்றது: இப்பங்கசுவின் தாக்கம் கசிவினை அதிகரிக்கச் செய்கின்றது: ஷெல் பட்ட தென்னை மரங்களின் காயங்களினூடும் இப் பங்கசு ஊடுருவுகின்றது:

### அறிகுறிகள்

தென்னை மரத்தின் அடிப்பகுதியிலோ அல்லது தண்டின் ஏனைய பகுதியிலோ மரப்பட்டையில் நீளப்பாடானவெடிப்புக்கள் தோன்றி செங்கபில அல்லது துரு நிறமான தண்ணீர்த் தன்மையான திரவம் கசிவது இந்நோயின் ஆரம்ப அறிகுறி ஆகும்.

சுமார் 6'' – 9'' வரை நீளமாக வெடித்து அதனூடாக பிசின் வடிவது போன்று வடியும்; இந்நிலையில் கட்டுப்பாட்டினை மேற்கொள்ளாவிடில், படிப்படியாக இப்பகுதி கருமை நிறமாக மாறி முடிவில் நரை கலந்த கறுப்பாகின்றது: நோய் உண்டான பல பகுதிகள் சேர்ந்து பெரிய பகுதிகள் உண்டாகும்;

நாளடைவில் நாம் கவனிக்காது விடின், இப்பகுதியிலிருந்து திரவத் தன்மையான கசிவு நின்று கூழ் போல் தடித்து மேற்பட்டை முழுவதும் உக்கி இருப்பதனை அவதானிக்கலாம்; தொற்றல் ஏற்பட்ட பகுதியை ஒரு கூரிய உளி அல்லது கத்தியினால் மேற்பட்டையை மட்டும் வெட்டி எடுத்து ஓரிடத்தில் போட்டு எரிக்கவும்:

தாக்கப்பட்ட பகுதிக்கு பங்கசு நாசினி பூசு முன்பு இதனை செய்தல் வேண்டும்; சில வேளைகளில் வீரியமான உருண்டையான பருத்த அடிகொண்ட இளம் மரங்களிலுள்ள மேற்பட்டை சில வெடிப்புகளைக் கொண்டிருத்தல் அசாதாரணமாகும்.

இந்நோய் உதாரணமாகுப் பைகளைக் கூட்டி தென்னை மரத்திற்கு கீழ் தீயிடப்படுதல், மின்னல் தாக்கிய மரம், ஷெல்பட்ட தென்னை மரங்கள், செவ்வண்டு தாக்கம் ஏற்பட்ட மரங்களில் இலகுவில் அடையாளம் காணலாம்.

இந் நோயின் அறிகுறிகளானகசிவினையும், தண்டுக் கசிவினால் பாதிக்கப்பட்ட மரத்தில் செவ்வண்டுத் தாக்கம் உள்ளதா என்பதனையும் அவதானித்தல் வேண்டும்:

அதிகளவு உரப்பிரயோகமும், நீரினது சடுதியான உறிஞ்சலும் மரப்பட்டையில் வெடிப்பினை ஏற்படுத்தி பங்கசு உட்செல்ல வழி வகுக்கின்றது;

### கட்டுப்படுத்தும் முறை

இது ஒரு பங்கசு நோய் என்பதனால், ஆரம்பத்தில் கண்டு பிடித்தால், இலகுவாக குணமாக்கலாம். பிசின் வடியும் பகுதியை அல்லது கரிய நிறப் பரப்புகளை கூரிய கத்தியினால் அல்லது கைக்கோடரியினால் செந்நிற இழையம் தெரியும் வரை அதாவது தென்னை மரத்தின் மேற்பட்டையை மட்டும் வெட்டி எடுத்து ஓரிடத்தில் போட்டு உடனடியாக எரிக்கவும்; உக்கிய கரித்தன்மையான நாரிழையம் முற்றாக அகற்றப்படுதல் வேண்டும்.

தொற்றல் ஏற்பட்ட பரப்புகளை முற்றாகத் துப்பரவு செய்த பின்பு, தண்டில் தொற்றல் ஏற்பட்ட பகுதிக்கு மேற்புறமாக, 2 அங்குலம் அளவு அகலத்தில் மேற்பட்டையினை மட்டும் சீவிஎடுத்து விட வேண்டும். பின்பு ''போடோ கலவை'' (Bordeaux Mixture) என்னும் பங்கசு நாசினியை தயாரித்தவுடனேயே காயப்படுத்தப்பட்ட எல்லாப் பகுதிகளுக்கும் (பட்டை வெட்டிய பகுதி உட்பட) தும்பின் உதவியுடன்பூசலாம்.

10 நாட்களின் பின்பு, வேறு தொற்றலோ அல்லது கசிவுகளோ இல்லாதவிடத்து காயங்களின் மேல், கரித்தார் (Coaltar) அல்லது மெழுகு பூசி விடவும். இத்தகைய நிகழ்வுகளில், சில தென்னைச் செய்கையாளர்கள் பட்டை வெட்டுவது ஏன் என்ற காரணம் தெரியாமல், எல்லா மரத்திற்கும் பட்டையை வெட்டுகின்றனர். இது முற்றிலும் தவறான செயல்முறையாகும்.

தண்டுக் கசிவு உண்டாகிய மரத்திற்கு மட்டும் இதனைச் செய்தல் வேண்டும். கசிவு முற்றாக இல்லாமல் போனதனை உறுதிப்படுத்த காயங்களை சில நாட்களின் பின்பு பரிசோதிக்க வேண்டும்.

கசிவு அதிகளவு ஏற்பட்டு பெரிய பரப்பளவு தாக்கப்பட்டால் தொற்றல் ஏற்பட்டுள்ள இழையங்களை இயலுமான அளவு முற்றாக அகற்றி அதனை எரித்தல் வேண்டும். இப்படியான நேரத்தில் கறையான் அல்லது வண்டுத் தாக்கம் நடைபெற வாய்ப்புண்டு. உதாரணமாகக் கறையான்களைக் கட்டுப்படுத்த குளோரோடேன் பூச்சி நாசினியை தெளிப்பது அல்லது பூசுவது அவசியமானதாகும்;

தண்டுக் கசிவுநோய்க்கு பரிகாரம் காண முன்பு, தண்டு கசிவிற்கான காரணத்தினை ஆராய்ந்த பின்பு தான் மேற்குறிப்பிட்ட செயல் முறைகளைக் கையாள வேண்டும். பரிகாரம் நோய் நிகழும் சந்தர்ப்பத்தினை பொறுத்துள்ளது. உதாரணமாக மின்னலினால் ஏற்படும் தண்டுக் கசிவு எத்தகைய சந்தர்ப்பமாக இருந்தாலும், தண்டுக் கசிவு நோய் தான் என்று உறுதிப்படுத்தினால் மட்டும், மேற்குறிப்பிட்ட முறைப்படி பரிகாரம் செய்யலாம்.

### ''போடோ கலவை'' தயாரிப்பது எப்படி?

இது ஒரு பங்கசு கொல்லி ஆகும். இக் கலவை தயாரிப்பதற்கு மட்பாண்டங்களை உபயோகிக்கவும் ஒரு மரத்திற்கு தேவையான அளவு பின்வருமாறு:-

செப்பு சல்பேற் அல்லது துரிசு – 40 கிராம்.

நீறிய சுண்ணாம்பு (வெற்றிலைக்குப் போடுவது) –40கிராம்;

நீர்- 1லீற்றர்.

தண்டுக் கசிவு நோய்க்கு பரிகாரம் செய்வதற்கு முதல் நாள் இரவு செப்பு சல்பேற் பளிங்குகளை மட்பாத்திரத்தில் ½ லீற்றர் நீரில் ஊறவிடவும். நீறிய சுண்ணாம்பினை பிறிம்பாக ½ லீற்றர் நீரில் கரைத்து மெல்லிய துணியில் வடித்தல் வேண்டும் பின்பு இரண்டினையும் ஒன்றாக சேர்த்தல் வேண்டும். இக் கலவை தயாரித்தவுடனேயே பாவித்தல் வேண்டும். பங்கசு நாசினிகள் நஞ்சுத் தன்மை வாய்ந்தமையால மிகவும் அவதானமாகவும், கவனமாகவும் கையாளப்படுதல் வேண்டும்,

எனவே, தற்போது வேகமாகப் பரவி வரும் இந்நோயினையும், பீடைத்தாக்கத்தினையும் உடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவோமாயின், தேங்காய் விளைச்சலைக் கூட்ட முடியும்.

எனவே, மேலதிக விபரங்கள் தேவைப்படுமிடத்து தென்னைச் செய்கையாளர்கள் தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவை நிலையக் கட்டடம், நல்லூர் என்ற முகவரியுடன் ஒவ்வொரு புதன் கிழமைகளில் அலுவலக நேரத்தில் நேரில் தொடர்பு கொள்ள முடியும்;

ஜெ. சத்தியேந்திரன்
யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி
உத்தியோகத்தர்

## யாழ். மக்களின் முன்னேற்றத்தை தடுக்கும் சதித்திட்டமே மக்கள் வங்கி உதவிமுகாமையாளரின் இடமாற்றம்

### சுன்னாகம் வர்த்தகர் சங்கம் அமைச்சருக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

1997 ஆம் ஆண்டில் மக்கள் வங்கியின் யாழ். வடவலய உதவிப்பொது முகாமையாளராக நியமிக்கப்பட்ட கே திருநாவுக்கரசு வங்கிகள் சேகரிப்பு நிலையங்களாக மட்டும் இயங்கக்கூடாது என்ற கொள்கையில் உறுதியாக இருந்தார்.

இவரது இடமாற்ற உத்தரவு யாழ். மக்களின் முன்னேற்றத்தையும் புனரமைப்பையும் திட்டமிட்டுத் தடுக்கும் சதித்திட்டம்போல் எமக்குத் தோன்றுகின்றது.

மக்கள் வங்கியின் யாழ் வடவலயஉதவிப்பொது முகாமையாளரின் இடமாற்ற உத்தரவு குறித்து, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கு சுன்னாகம் வர்த்தகர் சங்கம் அனுப்பி வைத்துள்ள ஆட்சேபனை மகஜரில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் ஆட்சேபனை மகஜரில் மேலும்,

யாழ் குடாநாட்டில் இயங்கிய வங்கிகள் எல்லாமே இப்பிரதேசத்தில் பணம் சேகரிக்கும் நிலையங்களாகச் செயற்பட்டன.

இப்பணங்கள் சிங்களப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய பயன்பட்டன;

இந்த நிலையை மாற்றி கடன் வழங்கல், மேலதிகப் பற்று, உத்தரவாதக் கடிதக் கடன்கள், சுயதொழில் கடன்கள் என்பவற்றை எல்லாம் வங்கி வாடிக்கையாளரின் நன்மை கருதி யாழ். மக்களுக்கு வழங்கி வந்தவர் இவர்;

எனவே இடமாற்ற விடயத்தில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு இந்த இடமாற்றத்தை இரத்துச்செய்யவேண்டும் என்றுள்ளது. (உ)

## அலங்கார உற்சவம்

[யாழ்ப்பாணம்]

கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தில கடந்த ஞாயிறு முதல் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது எதிர் வரும் 4, 5 ஆம் திகதிகளில் முறையே தேர், தீர்த்த உற்சவங்கள் இடம் பெறவுள்ளன.

[உ-104]

## பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டான்

[யாழ்ப்பாணம்]

பல நாட்களாக திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த ஒருவர் கையும்மெய்யுமாகப்பிடிபட்ட சம்பவம் இணுவில் பகுதியில் அண்மையில் நிகழ்ந்துள்ளது; மின்சாரத்தினை துண்டித்த பின் களவாட எத்தனித்தவேளை அவ்வூர் இளைஞர்களிடம் மேற்படி திருடன் அகப்பட்டான்; அத்திருடனை விசாரணைக்குள்ளாக்கிய போது அயல் கிராமத்தில் மேற்கொள்ளப் பட்ட திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஏனைய மூவரையும் இனம் காட்டியுள்ளதாகத் தெரியவந்துள்ளது (உ-6)

## திருடன் கைது

(மல்லாகம்)

திருட்டுக்களுடன் தொடர்புடைய, இடம் பெயர்ந்து சுன்னாகத்தில் வாழும் இளைஞனை ஊரெழு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

(உ-122)

# இனப்பிரச்சினையை தீர்க்கும் வல்லமை
# பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுக்கே உண்டு
## கொழும்பு பல்கலையின் கருத்துக் கணிப்பில் தெரிவிப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் வல்லமையும் ஆற்ற லும் பொதுஜன ஐக்கிய முன் னணி அரசுக்கே உண்டென்று கொழும்பு பல்கலைக்கழக சமூகவியல் பிரிவினர் மேற் கொண்ட கருத்துக் கணிப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் கொழும்பு பல் கலைக்கழக சமூகவியல் பிரிவி னர் பேராசிரியர் எஸ் பெற் றிக்கே தலைமையில் இனப்பிரச் சினையை தீர்க்கக் கூடிய வல் லமை பொருந்திய கட்சி எது வென்ற கருத்துக் கணிப் பென்றை நடத்தினர்.

வடக்கு கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணங் களில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பில், 45 சதவீதமான வர்கள் பொதுஜன ஐக்கிய முன்னணிஅரசாலேயே இனப் பிரச்சினையை தீர்க்கமுடியு மெனவும், 32சதவீதமானவர் கள் ஐக்கியதேசியக்கட்சி அர சாங்கத்தாலேயே தீர்க்க முடி யுமெனவும் நம்பிக்கை தெரி வித்துள்ளனர்.

அத்துடன் தற்பொழுது நாட்டில் உள்ள முக்கிய பிரச் சினை எதுவென்று மக்களிடம் கேட்கப்பட்ட போது 70 வீத மான மக்கள் இனப்பிரச்சி னையை சுட்டிக்காட்டியுள்ள னர். இவர்களில் பெரும்பான் மையானோர் சிங்களமக்களா வர்.

இதேவேளைதமிழ் முஸ்லிம் மக்களில் பெரும்பான்மை யானோர் இனப்பிரச்சி னையை தீர்க்கக்கூடியவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் எனத் தெரிவித்திருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

## புலிகள் தரப்பில்

★ லெப்ரினன் முல்லை [லோகநாயகம் பத்மாவதி] மட்டக்களப்பு

ஆகிய போராளிகளும்கடந்த ஏப்ரல் மாதம் 8ம்திகதி மன் னார் பகுதியில் சி.ஐ.எஸ். யு புலனாய்வுப் பிரிவினரல்கைது செய்யப்பட்டு பின்னர் சுடப் பட்ட

★ லெப்ரினன்சிலன்[நாதன் [செல்வராசா சசிகுமார்] முள்ளியவளை

என்ற போராளியும் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித் துள்ளனர். [ந-5]

## கொழும்பில் சத்தியாக்கிரகம்

[கொழும்பு]

களனி பல்கலைக் கழக மாணவர் நடாத்திய ஆர்ப் பாட்ட ஊர்வலம் ஒன்றின் மீது பொலிசார் தாக்குதல் மேற் கொண்டதைக் கண் டித்து இன்று நண்பகல் கொ ழும்பில் சத்தியாக்கிரகப் போராட்டம் ஒன்றுநடைபெற வுள்ளது.

கொழும்பு விகாரமா தேவி பூங்காவுக்கு முன்னால் அனைத்துப் பல்கலைக் கழக பிக்குமார் சம்மேளனம் இச் சத்தியாக் கிரகப் போராட் டத்தை நடத்தவுள்ளது.

இந்த சத்தியாக்கிரகப் போ ராட்டத்தில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பௌத்தபிக்குகள் கலந்து கொள்வார்கள் என வும் தெரிவிக்கப்படுகிறது. [வ]

## புலிகளுக்கு

தானப்பேச்சு வார்த்தையில் புலிகளைப் பங்கு கொள்ளச் செய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது.

நீண்ட காலமாகத் தொட ரும் பிரச்சினைக்கு தீர்வு கண்டு யுத்தத்தை நிறுத்து வதால் கூடிய பலனை அடை யப் போகின்றவர்கள் சிங்கள மக்களே ஆவார்.

பேச்சுவார்த்தை நடத்து வதற்குரிய சூழ்நிலை ஒன்று இல்லாத நிலை காணப்படு கிறது. இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியே ஆகும். அரசியல் யாப்பின் திருத்தத்தை நாம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்த போது அதனை ஐ.தே. கட்சி எதிர்த்ததன் மூலம் அக்கட்சி நாட்டு மக்களுக் குப் பெரும் துரோகம் இழைத்து விட்டது.

சமாதானப் பேச்சுவார்த் தையை நடாத்த வேண்டா மென்று ஒரு சாரார் கூறி வருகின்றனர். யுத்தத்தால் அங்கவீனமானோரும் காணா மற் போன படையினரது பெற்றோரும் சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர்.

தமிழ் மக்களின் பிரதிநிதி கள் தமிழீழ விடுதலைப்புலி கள மாத்திரமலல, தமிழ்க் கட்சிகளும் உளளன. முஸ் லிம் மக்களுக்கும் பிரச்சினை கள் உண்டு. அரசாங்கத்தின் தீர்வுத்திட்டத்தை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்க்காது விட்டால், அதனை நாம் நிறைவேற்றி இருப்போம்.

அதன் மூலம் விடுதலைப் புலிகள் பேச்சுக்கு வருவதற் கான அழுத்தம் மேலும் அதிகரிக்குமென்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள் ளார்.

இப்பேட்டியின் போது தமி ழீழவிடுதலைப்புலிகள்மீதான தடை குறித்தோ அது தொடர்பான கருத்துக்கள் குறித்தோ ஜனாதிபதி எது வும் தெரிவிக்கவில்லை என் பதும் இங்கு குறிப்பிடத்தக் கது. [வ]

# ஒரு கோடி ரூபா செலவில் யாழ். வைத்தியசாலையில் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் புற்று நோய் சிகிச்சைபிரிவினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுத் துள்ளதாக வடக்கின் அபி விருத்தி புனர்வாழ்வு புனர மைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

தனதுஅமைச்சின் நிதிஉதவி யுடன் ஒருகோடிரூபா செல வில் புற்றுநோய் பிரிவு ஆரம்பிக்கப்பட வுள்ளதாக வும் சுமார்50முதல்75 பேர் வரை இப்பிரிவில்தங்கியிருந்து சிகிச்சைபெற வசதிஅளிக்கப் படும் எனவும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தெல்லிப் பழையில் இயங்கிவந்த புற்று நோய் மருத்துவமனை80 களின் இறுதிப்பகுதியில் குடா நாட்டின்தீவிரமடைந்த யுத் தத்தை அடுத்து முற்றிலுமாக சேதமடைந்து புற்றுநோய்க்குசிகிச்சையளிக்கப் பயன் படுத்தப்படும் கதிர்வீச்சு இயந் திரங்கள்யாழ்போதனா மருத் துவமனைக்கு எடுத்து வரத் தடை விதிக்கப்பட்டதும் தெரிந்ததே. (இ-10)

## பயணிகள் திருப்பப்பட்டனா

[வவுனியா]

நீண்ட நாட்களின் பின்னர் வவுனியாவிலிருந்து வன்னி செல்ல அனுமதிக்கப் பட்ட மக்கல் ளிஒருதொகுதியி னரை படையினர் நேற்று இடையில் திருப்பி அனுப்பி யதாக வவுனியாச் செய்திகள் தெரிவிக்கின்றன. [ந-5]

## கண்டி

ளனர்.

இரு பஸ்களில் ஏற்றப்பட்டு காதல் ஜோடிகள் கண்டிப் பொலிஸ் நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

அங்கு பொலிஸ் இன்ஸ் பெக்டர் அவர்களுக்கு புத்தி மதி கூறி, எச்சரிக்கை செய்து விடுதலை செய்துள்ளார்.

இதேவேளை மேற்படி காதல் ஜோடிகளில் ஒரு ஜோடி கொழும்பிலிருந்து கண்டிக்கு வந்தவர்களென் பதும இங்கு குறிப்பிடத்தக் கது. [இ]

## சனத்தொகைமதிப்பீட்டிற்கு அமைச்சர் டக்ளஸ்எதிர்ப்பு

[யாழ்ப்பாணம்]

அரசாங்கம் சனத்தொகைக் கணிப்பீட்டை மேற்கொள் வதை தாம்விரும்ப வில்லை யென்று வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா இந்திய செய்திஸ்தா பனமானபீ.ரீ.ஐ சேவைக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டி யில் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அமைச்சர் தெரிவிக்கையில் சனத் தொ கைக் கணிப்பீடு இடம் பெறு மாயின் மிகக்குறைந்தளவான நிதி ஒதுக்கீடுபல்கலைக்கழகத் துக்கு அனுமதி பெறும்மாண வர் எண்ணிக்கை மற்றும் பாராளுமன்ற ஆசனங்களின் எண்ணிக்கை ஆகியவை குறைந்து விடும் இதனால் சனத் தொகைக் கணிப்பீடு மேற்கொள்வதை தாம்விரும் பவில்லை யென்று தெரிவித் துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்கள் மீளவும் தமதுசொந்த இடங்க ளுக்கு குடிவந்த பின்பு மேற் படி சனத் தொகைக் கணிப் பீட்டை மேற்கொள்வதே சாலப் பொருத்தமான தென் றும் அமைச்சர் தேவானந்தா தெரிவித் துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. [இ-10]

# கூ. அ. தி. வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படும்!
## செயலாளர் பரமலிங்கம் தகவல்

[யாழ்ப்பாணம்]

வடகிழக்கு மாகாணத்தில் உள்ளகூட்டுறவு அபிவிருத்தி திணைக்களங்களில் நிலவும் ஆளணிபற்றாக்குறை விரை வில் நீக்கப்படும் எனவும்இதற் கான அமைச்சரவை அங்கீ காரம் தற்போது கிடைத்துள் ளதாகவும் வடகிழக்கு மா காணபொதுநிர்வாகஉள்ளூரா ட்சி கூட்டுறவு அமைச்சின் செயலாளர் கே பரமலிங்கம் வலம்புரிக்குத்தெரிவித்தார்.

யாழ்மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுஅபிவிருத்திதிணைக் களத்தில் நிலவும ஆளணிப் பற்றாக்குறையும் கூட்டுறவுப் பரிசோதகருக்கும் உள்ள வெற்றிடங்களும் நிரப்பப் படாமையினால் திணைக் களத்தின் வேலைகள் பெரிதும் பாதிப்படைந்துள் ளன.

இந்தவெற்றிடங்கள் நிரப்ப பட்டபின் யாழ்ப்பாணம் கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் வேலைகள் திருப்திகரமாக இருக்குமென் றும் செயலாளர் கே.பரம லிங்கம் மேலும் தெரிவித்துள் ளார். [வ]

## எலும்புக்கூடுகள் கிளிநொச்சியில் மீட்பு

[வவுனியா]

கிளிநொச்சிதிருநகரிலுள்ள வீட்டின் மலக்கூடக் குழியி லிருந்து இரண்டுஎலும்புக்கூடு கள் மீட்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியைபடையினர் கைப்பற்றியபோதுகாணாமல் போனவர்களின் எலும்புக் கூடுகளாக இருக்கலாமென நம்பப்படுகிறது.

இதேவேளை கிளிநொச்சி யில் காணாமல்போன184 பேரில் இதுவரை65 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. [ந-5

## சிஹல

வைச் சந்தித்து அவரது கை யொப்பத்தைப் பெற்றுக் கொண்டனர்.

மல்வத்த பீட மகாநாயக்க தேரர் வணக்கத்துக்குரிய ரம் புக்கலவிபசார தேரரிடமும் கையெழுத்து இயக்கத்துக்கு ஆசி பெறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கண்டி புகையிரதப் பகுதியில் வைத்துகையொப்பங்கள் பெறப்பட்டன. (வ)

## வெடிவிபத்தில்

பான மரணவிசாரணை யாழ். போதனாவைத்தி சாலையில் நேற்று நடை பெற்றது. (இ-43,6)

## திருத்தம்

வலம்புரியில் நேற்று வெளியானகலாலயா பயிற்சி என்ற விளம்ப ரத்தை கலாலயா பயிற்சி யகம் எனத் திருத்தி வாசிக்கவும். [ஆ-ர்]


# அனைத்து லங்கா சிமெந்து ஊழியர்களின் கவனத்திற்கு விசேட கலந்துரையாடல்

மாண்புமிகு அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா அவர்கள், அனைத்து லங்கா சிமெந்து ஊழியர்களுடன் தொழிற்சாலையின் எதிர்காலம்பற்றியும் தொழிலாளர் களின் பிரச்சினைபற்றியும் கலந்துரையாட அழைக்கின் றார்.

காலம்: 31-5 2001 வியாழக்கிழமை
நேரம்: காலை 9.30 மணியளவில்
இடம்: யாழ் வீரசிங்கம்மண்டபத்துக்கருகில்

ஊழியர்கள அனைவரையும் தவறாது சமுகமளிக்கு மாறு கேட்டுக் கொள்கின்றேன்.

செயலாளர்.

கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம்
லங்கா சிமெந்து நிறுவனக்கிளை,
காங்கேசன்துறை.
(கி-2045)



## நாகம்ஸ்
(சுன்னாகம்)
இன்று முதல்
சத்தியராஜ், குஷ்பு
கபாலி
நடித்த
### உன்னைக் கண் தேடுதே
தினசரி [ரீல்ஸ்]
11-00, 2-30 பு. நே.
(கி-2021)



# மரண அறிவித்தல்
## சேனாதிராசா இராசையா

மந்துவிலைப்பிறப்பிடமாகவும் கண்ணன் ஆலயவீதி மட்டுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சேனாதிராசா இராசையா (13-05-2001) அன்று காலமானார்.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இ. புஸ்பா, இ.ஜெயந்தி.
(மகள்மார்)

தற்காலிக முகவரி:
நாவலர்மடம், நவிண்டில்,
கரவெட்டி.
(கி-2046)


இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, ஜெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர் களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.